பதினப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப் பெற்றது.

ௐ

# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

ஸ்தாபிதம் (1889 ஆவணிமீ உகஉ ஆரம்பமானது)

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

[புத்தகம்—சஅ] யாழ்ப்பாணம்:— தாது௵ ஆடி௴ கஉ (1936 ஜூலை 16) வியாழக்கிழமை [இலக்கம்—உஅ]

## திருவள்ளுவரும் திருக்குறளும்

### "தமிழ்மணம் வீசாத இடத்திலும் திருக்குறளின் மணம் வீசுகின்றது"

### வள்ளுவர் வரலாறு

(மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையர் தலைமைப் பேருரை)

(சென்னையில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாட் கொண்டாட்ட விழாவிலன்று செய்த தலைமைப் பிரசங்கம்)

#### முன்னுரை

செயற்கரிய செய்த பெரியார்கள் திருநாட்களைக் கொண்டாடும் வழக்கம் நமது நாட்டில் தொன்று தொட்டே இருந்து வந்தது. ஆயினும் இக்காலத்தில் அங்ஙனம் செய்வதில் நம் நாட்டாருக்கு ஊக்கமில்லை. மேனாட்டார் தம் நாட்டுப் பெரியாரைப் போற்றுவதிற் சிறந்தவர்கள். நம்முடைய நாட்டில் இப்பொழுது சிலகாலமாகப் புலவர் பெருமக்களின் திருநாட்களைக் கொண்டாடும் முயற்சி மலிந்து வருகின்றது.

முதற் பாவலராகிய திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாட வேண்டுமென்னும் நல்லுணர்ச்சி தமிழ்நாட்டில் தோன்றியிருப்பதை அறிந்து எனது உள்ளம் குளிர்கின்றது. அவ்வூக்கத்தை உண்டாக்கக் காரணமாக இருந்த இந்நகர்க் கழகத்தாரின் முயற்சியைப் பாராட்டுகிறேன். நம்முடைய மாகாணத்துக்கு இராஜதானி நகரமாகவும், திருவள்ளுவர் இருந்த இடமாகவும் இருத்தலின், இந்நகரில் இவ்விழாவைச் சிறப்புற நடத்துதல் எவ்வகையினும் பொருத்தமுடையதாகும். இன்று வைசாக சுத்த பௌர்ணமியாகும். கௌதம புத்தர் அவதரித்ததும் ஞானோதயம் அடைந்ததும் ஆகிய இத் தினத்தைப் பௌத்தர்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகிய அப் பெரியாருடைய நாளும் தெய்வப்புலவராகிய திருவள்ளுவர் திருநாளும் ஒருங்கே இன்று அமைந்தமை இத் திருநாளுக்கு ஒரு தனிச் சிறப்பை அளிக்கின்றது.

இக்கொண்டாட்டக் கூட்டத்திற்குத் தலைமைவகிக்கவேண்டுமென்று விரும்பித் திருவள்ளுவரைப்பற்றிப் பேச எனக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்த இக்கழகத்தினர்பால் மிக்க நன்றியறிவுடையேன்.

சென்ற ஆண்டு நிகழ்ந்த இத் திருநாளின் சம்பந்தமாக வெளிவந்த திருவள்ளுவர் நினைவு மலரில் பல அருமையான செய்திகள் தொகுத்து வெளியிடப்பட்டிருக்கின்றன. இப்பொழுது எனக்குத் தெரிந்த சிலவற்றை இங்கே கூற எண்ணுகிறேன். நான் கூறுவனவற்றில் பல உங்களுக்குத் தெரிந்திருக்கலாம், சில மாறுபாடாகத் தோற்றலாம். ஆயினும் பொறுமையுடன் கேட்கும்படி எல்லோரையும் வேண்டுகிறேன்.

#### குறளின் வியாபகம்

திருவள்ளுவரையும் அவரது திருக்குறளையும் பாராட்டாத புலவர்கள் இலர். தமிழ் மணம் எங்கெங்கே உண்டோ அங்கெல்லாம் திருக்குறளின் மணம் வீசிக்கொண்டே யிருக்கும். தமிழ் மணம் வீசாத இடத்திலும் திருக்குறளின் மணம் வீசுகின்றதென்று கூறுதலே இன்னும் பொருத்தமாகத் தோன்றுகின்றது. ஏனெனின், தமிழ் வழங்காத பிறநாடுகளிலுள்ள அறிஞர்கள் திருக்குறளின் மொழி பெயர்ப்புக்களைப் படித்து இன்புறுகிறார்கள். அங்கே தமிழ் மணம் ஏது? நாமெல்லாம் தமிழை யறிந்து அதன் மூலம் குறளை அறிகின்றோம். அவர்களெல்லாம் குறளின் பொருளறிந்து அதன்மூலம் தமிழைப்பற்றி அறிந்து கொள்கிறார்கள். இதனால் தமிழைக் காட்டிலும் குறளுக்கு வியாபகம் அதிகமாக இருப்பதை அறிகிறோமல்லவா?

#### குறளின் வடமொழி மொழிபெயர்ப்பு

குறளைப்போன்றதொரு நூல் வேறு எந்த மொழியிலும் இல்லையென்று பல மொழிகளை அறிந்தவர் கூறுகின்றனர். இதனைப் பல மொழிகளில் மொழிபெயர்த்திருக்கின்றார்கள். வடமொழியில் அறத்துப்பாலை மாத்திரம் மொழிபெயர்த்து 'நீதிஸூமாலா' என்று ஒருவர் வெளியிட்டிருக்கின்றார். அதனையன்றிக் குறள் முழுவதையும் என்னுடைய நண்பரொருவர் பல வருஷங்களுக்கு முன்பு வடமொழிச் சுலோகங்களாக மொழிபெயர்த்தமைத்திருக்கின்றார். அப்புத்தகம் இன்னும் அச்சிடப்படவில்லை.

(தொடர்ச்சி 7ம் பக்கம்.)

## பலி நீக்கப் பட்டது

விருத்தாசலம், ஜூன், 15—

ஜூன் 15ந் தேதி வெள்ளிக்கிழமை விருத்தாசலத்திற்கு வடமேற்கில் சுமார் 5 மைல் தூரத்தில் உள்ள செட்டிக் குப்பம் என்ற கிராமத்தில் நடைபெற்ற துரௌபதை யம்மன் கோவில் தீமிதி உற்சவத்திலும், அரவான் கடபலி என்ற சம்பவத்திலும் வழக்கப்படி ஆடு பலியிடுதல் வழக்கம். அதை இந்த வருடம் விருத்தாசலம் யுவர் சங்கத்தின் சார்பாக, ஜீவகாருண்ய துண்டுப் பிரசுரங்களாலும் அவ்வூர் ஜீவகாருண்ய அன்பர்களாலும் மிருகபலியை நிறுத்திப், பூசினிக்காய்வெட்டி உற்சவத்தைச் சிறப்பாக நடத்தினார்கள்.

## பொறுமையின் பெருமை

தீருத்தணிகை மலைமேலே குமாரதேவன்
திருக்கோலுவிற் றிருக்குமதன் பொருளைக் கேளீர்
திருத்தணிகை யென்பதிங்கு பொறுமையின் பேர்,
செந்தமிழ் கண்டீர். பகுதி: "தணி" யெனுஞ்சொல்,
பொருந்த முறுந் தணிகையினுற் புலமை சேரும்,
பொறுத்தவரே பூமியினை ஆள்வரென்னும்
அருந்தமிக்க பழமொழியுந் தமிழிலுண்டாம்,
அவனியிலே பொறையுடையான் அவனே தேவன். (1)

பொறுமையினை அறக்கடவுள் புதல்வனென்னும்
யுதிட்டிரனு நெடுநாளிப் புவிமேற் காத்தான்
இறுதியிலே பொறுமை நெறி தவறி விட்டான்
அதலாற் போர்புரிந்தா னிளையா ரோடே
பொறுமையின்றிப் போர்செய்து பாதநாட்டைப்
போர்க்களத்தே அழித்துவிட்டுப் புவியின்மீது
வறுமை யையுயுங் கலியினையும் நிறுத்திவிட்டு
மலைமீது சென்றன்பின் வானஞ் சென்றான். (2)

ஆனாலும் புவியின்மிசை உயிர்களெல்லாம்
அநியாய மரணமெய்தல் கொடுமையன்றே?
தேறின உயிரை விட்டுச் சாக லாமோ?
செத்திடற்குக் காரணந்தான் யாதென்பீரேல்
கோணுக்ச் சாத்திரத்தை யாரு மாண்பார்
ஜகதீச சந்திர வஸு கூறுகின்றான்:—
(ஞானனு பவத்திலிது முடிவாங் கண்டீர்)
"நாடியிலே அதிர்ச்சியினால் மரணமென்றான்" (3)

கோபத்தால் நாடியிலே அதிர்ச்சியுண்டாம்;
கொடுங்கோபம் பேரதிர்ச்சி: சிறியகோபம்
ஆபத்தா மதிர்ச்சியிலே சிறியதாகும்
அச்சத்தால் நாடியெலா மவிந்துபோதும்
தாபத்தால் நாடியெலாம் சிதைந்து போதும்.
கவலையினால் நாடியெலாம் தழலாய் வேதும்
கோபத்தை வென்றிடலே பிறவற்றைத்தான்
கொல்வதற்கு வழியெனநான் குறித்திட்டேனே. (4)

சுப்பிரமணியபாரதியார்

## புலிபோலிருந்த பிரிட்டன் பூனைபோல் பதுங்குகிறது

### சூயஸ் கால்வாயில் முட்டுக்கட்டை

### பிரிட்டிஷ் கடற்படை நிர்வாகத்தாரின் பயத்தால் நேர்ந்த பெரும் நஷ்டம்

'லண்டன் நியூஸ் கிரானிக்கிள்' என்னும் பத்திரிகையில், மிஸ்டர். பிலிப் ஜோர்டான் என்பவர் பின்வருமாறு எழுதுகின்றார்:—

தற்கால உலகில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தான் மிகப் பெரிய ஏகாதிபத்தியமாக விளங்குகிறது. சில நாடுகளில் பல பிரிட்டனின் ஆதிக்கத்தில உள்ளன. இவைகளுக்குப் பிரிட்டனுக்குமிடையே வர்த்தகக் கப்பல்கள் செல்லக் கடலில் அநேக பாதைகள் உள்ளன. அவைகளைப் பாதுகாக்கப் பிரிட்டன் பெரிய ராணுவத்தை வைத்துக்கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் ஜனங்கள் வருஷந்தோறும் கடற்படைக்கு 80,230,000 பவுண்களையும் தரைப் படைக்கு 49,281,000 பவுண்களையும் விமானப்படைக்கு 39,000,000. பவுண்களையும் செலவழித்து வருகின்றனர்.

லண்டனிலிருந்து ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் கடற பாதையில் அநேக நகரங்கள் உள்ளன. அவைகள் ஒவ்வொன்றுக்கும் ஏகாதிபத்திய விஸ்தரிப்பு சம்பந்தமாக ஓர் கதை உள்ளது. அந்தக் கதைகள் சாதாரணமாகக் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடங்களில சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. ஜிப்ரால்டர், மால்டா, சூயஸ், ஏடன், பம்பாய், கொழும்பு, திருக்கோணமலை, சிங்கப்பூர் மற்றும் ஆஸ்திரேலியாத் துறைமுகங்கள் சில முதலியவை கடற்பாதையிலுள்ள முக்கியமான நகரங்களாகும். சிங்கப்பூரில் கடற்பாதை இரண்டுகளாகப் பிரிகின்றன. ஒன்று வடக்கே சீனு ஜப்பான் முதலிய நாடுகளுக்குச் செல்லுகின்றது; மற்றொன்று ஆஸ்திரேலியாவுக்குச் செல்லுகிறது.

மேற்படி பாதையைத் தவிர அநேக சிறிய பாதைகள் பாலஸ்தீனம், வட ஆபிரிக்கா, இந்தியா முதலிய நாடுகளுக்குச் செல்லுகின்றன. அந்தப் பாதை சூயஸ் கால்வாய் வழியாகச் செல்லுகிறது. மத்தியதரைக் கடலையும் செங்கடலையும் சேர்க்கும் சூயஸ் கால்வாயில் 1869-ம் வருஷம்தான் பிரஞ்சு சக்ரவர்த்தினி யூஜினி சென்றார். அந்த வருஷம் முதற்கொண்டு சூயஸ் கால்வாயில் கப்பல்கள் போகலாயின. அதன்பின் சில வருஷங்களுக்குப் பின் டிஸ்ரேயிலி சூயஸ் கால்வாய் பங்குகளைப் பிரிட்டனுக்காக வாங்கினார். அதமுதற் கொண்டு சூயஸ் கால்வாய் பிரிட்டனின் ஆதிக்கத்திற்கு வந்தது.

சூயஸ் கால்வாயினால் பிரிட்டிஷாருக்கு மிகுந்த பலனுண்டு. அதன்மூலம் அவர்கள் கடற் படைகளை எளிதில் கீழ்நாடுகளுக்கு அனுப்பிவிடலாம். ஆனால் ஜெனரல் படாக்ளியோ அடிஸ்அபாபா நகருக்குள் வெள்ளைக் குதிரைமீது சவாரி செய்துகொண்டுபோன நாளன்றே கால்வாய்மீது பிரிட்டனுக்குள்ள ஆதிக்கம் குலைந்தது. இதாலி ஏகாதிபத்திய ஆசையென்ற கருமேகங்கள் செங்கடல்மேல் சூழ்ந்துகொண்டிருக்கின்றன: அங்குபறக்கும்யூனியன் ஜாக் கொடிக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதாலி தனது தேசியக்கொடியை அங்கு நாட்ட முயற்சிப்பதாகவே தெரிகிறது.

ஒரு காலத்தில் பிரிட்டிஷ் பலமாக விளங்கியது. இன்று பிரிட்டிஷ் பலஹீனமாக விளங்குகிறது செங்கடலில் உபத்திரவமென்றால், மத்தியதரைக் கடலுக்கே போக முடியாது. மத்தியதரைக் கடலையே பெரிய கடற்பாதையாகப் பிரிட்டன் வைத்துக்கொண்டு இதுவரையில் வியாபாரம் நடத்திவந்திருக்கிறது. ஆனால் இத்தாலியத் தந்திரோபாயங்களினால் சூயஸ் கால்வாய் மூடப்பட்டு அது ஓர் ஏரியாகச்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்.)

## பாலர் பகுதி

# பாலர் பரிசுக்கட்டுரை

அன்புள்ள

மருமக்காள்!

சென்ற வியாழக்கிழமை வெளியான இந்துசாதனத்தில் நான் குறிப்பிட்டவாறு "எதிர்காலத்தில் நான் எதுவாக இருக்க விரும்புகின்றேன்" என்னும் விஷயமாக எனது மருகரிற் சிலரும் மருகியரிற் சிலரும் சில கட்டுரைகளை எழுதியனுப்பினர்கள். 283 அங்கத்தவர்களைக் கொண்ட எங்கள் பாலர் சங்கத்திலே மிகச்சிலர் தாம் இப்பரிசுக் கட்டுரையை எழுதியனுப்ப மற்றவர்கள் அதிற் கருத்துச் செலுத்தாமல் இருப்பது பெரிதும் வருந்தத்தக்கதாகும். இம் முறை பார்வதி வித்தியாசாலையிலிருந்து இன்னும் இரண்டு அங்கத்தவர்கள்சேர்ந்திருக்கிறார்கள். இவர்களோடு எங்கள் சங்கத்தின் அங்கத்தவர்கள் தொகை 285 ஆகின்றது. ஆகவே எமது சங்கம் மேலும் மேலும் வலுவடைந்து வருகிறது. ஆதலால் மருமக்களாகிய நீங்கள் எல்லோரும் அதிற் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டும். பாலர்சங்க நடவடிக்கைகளைப் பத்திரிகையில் தவறாமல் படித்து வரவேண்டும். அதனால் உங்களுக்கு மிக்க தேர்ச்சி உண்டாகும்.

நிற்க, இம்முறை அனுப்பப்பெற்ற கட்டுரைகளில் முதலாவதாகத் தெரியப்பட்டுள்ள கட்டுரை சித்தங்கேணி, கணேசவித்தியாசாலையிற் கற்கும் த. இராசபூரணம் என்னும் மருகியின் கட்டுரையாகும். அதனையும் கீழே பிரசுரிக்கிறோம். இம்மருகிக்கு அடுத்த வாரத்தில் அதற்குரிய பரிசு தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படும். அடுத்த வாரத்திற்கு "நமது நாடு" என்னும் விஷயமாக எழுதப்படும் முதலாவது கட்டுரை இப்பத்திரிகையில் வெளியிடப்படுவதோடு அதை எழுதுவோருக்குப் பரிசும் வழங்கப்படும். அடுத்தமுறை பரிசு பெறுபவர் யார் பார்ப்போம். மருகியர் பரிசுபெற மருகர் பரிசு பெறாமல் இருந்தால் வெட்கமல்லவா? பார்ப்போம் மருகரது கெட்டித்தனத்தை?

---

### இம்முறை பரிசு பெற்ற பாலர் கட்டுரை

கணேச வித்தியாசாலை,
சித்தங்கேணி
13-7-36

எனது அன்புள்ள மாமா,

நான் எனது எதிர் காலத்தில் என்னவாக இருக்கவிரும்புகிறேன் என்பதைத் தங்கட்குக் கட்டுரை மூலம் வருகிற திங்கட்கிழமைக்கு முன்னெழுதியனுப்புமாறு தங்களால் நடாத்தப்படும் பாலர்சங்க வெளியீட்டில் வரைந்து அனுப்பினீர்கள். அதனை அதிக சிரமத்துடன் நோக்கி எனது எண்ணத்தைத் தெரிவிக்கின்றேன். உலகிற் பிறந்த ஒவ்வொருவரும் மேலான நிலையையடைய எண்ணுதல் சகசம். ஆனல் அவர்களுடைய எண்ணம் நிறைவேறுமைக்குக் காரணம் இடம், பொருள் ஏவல் முதலியவற்றில் பங்கமேற்படுதலேயாம். எனது எண்ணம் நிறைவேறுதற்கு மேற்கூறிய யாவும் பூர்த்தியாக இருக்கின்றன வென்று சந்தோஷமடைகின்றேன். உதாரணமாக, கல்விகற்றற்குரிய சைவத்தமிழ்ப் பாடசாலை சமீபத்திலுண்டு. பொருளுதவுதற்கு எனது அப்பா இருக்கிறார். ஏவுதற்கு எனது மாமா நீங்கள்தானே இருக்கின்றீர்கள்.

எனது விருப்பத்தின் காரணங்களை எடுத்துக்காட்டும்பொழுது நான் படித்தகதையொன்று ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது ஒரு நாள் ஒரு கிழவன் ஓர் தென்னைமரத்தை நாட்டினன். அப்பொழுது சிறுபையனொருவன் கிழவனைப் பார்த்து, அப்பா! இந்தமரம் காய்க்கும்பொழுது நீ இறந்துவிடுவாயே! ஆதலால் இதனால் உனக்கொரு பயனுமில்லையே என்றனன். அப்பொழுது கிழவன் "நம்முன்னோர் நாட்டிவைத்த மரங்களல்லவா நமக்குப் பலனைக் கொடுக்கின்றன. அப்படியே நாம் நாட்டும் மரமும் நமது பிற்சந்ததியாருக்குப் பயன்படும்" என்றனன். இதுபோல நம் இந்தியத் தாய்மாராகிய ஸ்ரீமதி சரோஜினி தேவி கமலாதேவி முதலியோர் நமக்காகத் தங்களைத் தியாகஞ் செய்கின்றனர். அப்படியே நாமும் நமது சந்ததியாருக்குத் தியாகஞ் செய்யவேண்டியது முறையல்லவா? அது எப்படிச் செய்வது? அதற்கு யான் ஒரு பண்டிதையாகவேண்டும். நமது அரசாங்கத் தலைவராகிய திரு. வை. துரைசுவாமி அவர்கள் தமது வரவேற்புக் கூட்டத்தில் தான் மாணுக்கனாக இருந்த நிலையை நினைத்து மகிழ்ச்சியடைந்தனரே. நானும் அவரைப்போலவே என்றும் சந்தோஷமடையவிரும்புகின்றேன். அதனை எங்ஙனம் எய்துவது? எப்பொழுதும் மாணவியாக இருக்கவேண்டும்.

இன்னும் நமது தமிழ்த்தாயின் நிலைமைதானென்னே? நம்மைப் பெற்று முத்தமிட்டுத் தாலாட்டி வளர்த்தனளே. இப்பொழுது தளர்ச்சியடைகின்றனளே.

மகன்றந்தைக்காற்றுமுதவி, இவன்றந்தை யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்

என்றபடி தமிழ்த்தாயின் பெருமையை நிலைநாட்டுதற்கு யான் ஓர் பண்டிதையாக வேண்டும்.

மாமாவும் தளர்ச்சியுற்றவராகக் காணப்படுகின்றீர்களே. ஒருபோது தங்கட்கு உதவி செய்வதற்காகத் தங்கள் மருகியருளொருவரை யழைத்தால் யான் பின்னிற்பேனேயாயின் தங்கள் பெருமைக்கு அது இழுக்கன்றே? ஆகையினால் இஞ்ஞான்ன காரணங்களால் நான் பண்டிதையாகவேண்டும்.

இங்ஙனம்
உங்கள் அன்புள்ள மருகி,
த. இராசபூரணம்.

---

இது நிற்க இன்னுமொரு கடிதம் எனக்குக் கிடைத்திருக்கிறது. அதை எழுதிய மருகர் நீர்கொழும்பைச் சேர்ந்த வ. சூரிய வில்மட் பறனந்து என்பவராவர். அக்கடிதம் வருமாறு:—

### சுப்புமாமாவுக்குக் கடிதம்

அன்புள்ள சுப்புமாமா!

எனக்கு வயது இப்போது சுமார் 9 ஆகின்றது. நான் 3-ம் வகுப்பிற் படிக்கிறேன். நீங்கள் இந்துசாதனப் பத்திரிகையில் சிறுவர்களாகிற எங்களுக்குப் புத்தி புகட்டும்படி எழுதி வரும் கதைகளையும் விடுகதைகளையும் படித்துப் படித்துச் சந்தோஷப்படுகிறேன் இருந்தும் எனக்கு ஓர் அபிப்பிராய பேதம் இருக்கின்றது. அதைப் பற்றி என் தகப்பனரிடம் கேட்டேன். அவர் என்னைக் கூர்ந்து கவனித்துச்சிரித்துவிட்டு, "பிள்ளாய்! நீ பெரிய மனிதனான பின் இவை எல்லாம் தெரியவரும்" என்று சொல்லிவிட்டார். அவர் சொன்னது என் மனதிற்குப்பிடிக்கவில்லை ஆனதால் சிறுவர்களாகிற எங்கள் மீது பட்சம் கொண்டிருக்கும் உங்களிடம் இதைக்கேட்டுத் தெரிந்து கொள்ள ஆசைகொண்டு கடிதம் எழுதலானேன். மாமா எனக்குள் இருக்கும் அபிப்பிராயபேதமென்னவெனில் எங்கள் வீட்டுக்கருகாமையில் பதினைந்துவருடகாலமாக ஒருவர் குடியிருந்த வீடு இப்போது காலியாக இருக்கின்றது. ஆனதால் நானும் என் தாயும் தகப்பனும் அண்ணனும் தம்பியும் அவ்வீட்டைச் சுத்தம் செய்து அழகுபடுத்திச் சுற்றிலும் பூஞ்செடிகள் நாட்டிக்கொண்டு நாங்கள் குடியிருக்கும் போது அவ்வீட்டுக்கு உடையவர் வந்து வீட்டைக் கேட்டால் அவர்களுக்கு வீட்டைக் கொடாது "அடே அப்பா! உங்கள் வீடு பாழடைந்து இருந்த வீட்டை நாங்கள் சீர்ப்படுத்திக்கொண்டிருக்கிறோம். ஆனதினால் வீட்டைத் தர முடியாதென்று விவகாரம் பேசினல், அவர்கள் கோட்டில் வழக்குத் தொடுப்பார்கள்தானே. கோட்டாரும் எங்களை வீட்டை விட்டுப் போகும்படி சொல்வார்கள்தானே. இதுசரியான நியாயம் என்று ஒத்துக்கொள்ளுவார்கள்தானே. ஆனல், இலங்கையர் ஆகிற நாமோ மெங்னில் இத்தீவில் 2357 வருடகாலமாகச் சுதந்தரமுள்ளவர்களாக வாழ்ந்துவந்தோம் இப்படியான நம் இலங்கையில் 6000 மைலுக்கு அப்பால் உள்ள இங்கிலிஷ்காரன் நிறைமுந்துகொண்டான். அவனை நாம் தூற்றினாலும் போகிறானில்லை; போற்றினாலும் போகிறானில்லை; நியாயத்தை எடுத்துக்காட்டினாலும் போகிறானில்லை; என்னமாமா? நமது நாடு நமக்குத்தானே சொந்தம்! எங்கள் பொறுப்பில் விட்டுவிடுங்களென்று சொன்னல் ஏன் சுப்புமாமா விட்டுக்கொடுக்கமாட்டார்கள்? இங்கிலிஷ் துரைகள் செய்வது சரிதானு என்பது எனது கேள்வி?

இப்படிக்கு,
வ. சூரிய வில்மட் பறனந்து

---

### சுப்புமாமா விடை

அன்புள்ள மருகர் சூரிய வில்மட் பறனந்துவுக்கு சுப்புமாமா மிக்க மகிழ்ச்சியோடு எழுதிக்கொள்வது:-

மருகா!

நீர் கேட்பது அத்தனையும் சரியே ஆகும். ஆனல், இப்போது உலகத்தில் நீதி நடக்கிறதா? அபிஸீனியாவை யுத்தத்திமிர் கொண்ட இத்தாலி கைப்பற்றியமுறை நீதியானதா? ஆதலால், உலகில் நீதி நிலவுகின்றதில்லை மருகா! மிருகபலமே வெற்றிகொண்டு வருகிறது. ஆனல், ஈற்றில் எப்போதாவது ஒருகாலத்தில் நீதி வெற்றி பெறுவது நிச்சயம். அதுவரை பொறுமையோடு நாமும் கருமம் ஆற்றிவருவோம். உமது இளைய தேசபக்தியை நான் மிகவும் பாராட்டுகிறேன். உமது தந்தையார் உம்மைப்பற்றிப் பெருமை யடைந்து கொள்வாராக. ஏனைய மருமக்களும் இவ்வாறே தேசபக்தியுள்ளவர்களாக வருவார்களாக.

இப்படிக்கு
உங்கள் அன்பு மறவாத
சுப்புமாமா.

---

### கடிதங்களுக்கு விடை

மருகர், க. குமாரசுவாமி:— உமது வயதையும் நீர் படிக்கும் வகுப்பையும் தெரிவிப்பீராக.

மருகர், ஆ. கருணாரத்தினம்:— நீரும் உமது வயதையும் கற்கும் வகுப்பையும் தெரிவிப்பீராக.

மருகர், தி. சிதம்பரநாதன்:— உமது கடிதம் கிடைத்தது. நீர் பரிசுக்கட்டுரையில் பரிசுபெற முயற்சிப்பீராக.

இப்படிக்கு
சுப்புமாமா.

---

## காணமற்போன மலைப்பாம்பு

### மீண்டும் கூண்டில் அடைக்கப்பட்டது

கொழும்பு கோட்டைக் கறுல்ரோ வாசியான ஹெர் விம்லெல்ம்பெக்கர் என்பவருக்குச் சொந்தமான சுமார் 12 அடி நீளமுள்ள மலைப்பாம்பு, சென்ற ஏப்ரல் 10ந் தேதி திடீரென்று காணமற்போன விபரம் எற்கெனவே இந்துசாதனத்தில்வெளிவந்துள்ளது. சுமார் 3 மாத காலம் அப்பாம்பு சுயேச்சையாகச் சஞ்சரித்த பின் சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை மறுபடியும் பிடிபட்டது.

அன்று அதிகாலையில் ஹெர் பெக்கருக்குச் சொந்தமான குருவிக்கூண்டிலுள்ள குருவிகள் கத்த ஆரம்பித்ததாகவும், அது என்னவென்று ஹெர் பெக்கர் சென்று பார்த்தபோது அந்தக்கூண்டைச் சுற்றிப் பிரஸ்தாப மலைப்பாம்பு சுருண்டுகொண்டிருந்ததாகவும், அவர் உடனே அதன் கழுத்தைப் பிடித்துத் தூக்கி அதைக்கூண்டில் அடைத்துவிட்டதாகவும் தெரிகிறது.

---

# புலிபோலிருந்த பிரிட்டன் பூனைபோல் பதுங்குகிறது

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுவிட்டது. யுத்தகாலத்தில் இனி பிரிட்டிஷ் கப்பல்கள் அதவழியாகக் கஷ்டமின்றிச் செல்ல முடியாது. ஏனெனில் ஜிப்ரால்டருக்கும் சூயஸ்கால்வாய்க்கு மிடையே பான்டலேரியாவில் இத்தாலி தனது கோட்டையைக் கட்டியிருக்கிறது.

கப்பல்கள் செல்லுவதற்கு நதிபோல் விளங்கும் மத்தியதரைக்கடல் அடுத்த மகாயுத்தத்திற்குக் காரணமாயிருக்கலாம்; அந்த யுத்தகளமாகவும் ஆகலாம். அந்த யுத்தத்தில் பிரிட்டிஷ் கடற்படை நசுக்கப்படலாம். பிரிட்டன்மட்டும் அம்மாதிரி ஆபத்திலிருந்து காப்பாற்றிக் கொள்ள விரும்பினல் உடனே மத்தியதரைக் கடலின் கிழக்கோடியிலுள்ள பாலஸ்தீனத்தில் புதிய விமானப்படை ஸ்தலத்தை ஏற்படுத்தவேண்டும். பாலஸ்தீனத்தில் விரோதிகள் வரமுடியாத பாலைவனங்கள் பல உள்ளன.

பிரிட்டிஷ் ராணுவ விமானங்கள் அங்கிருந்து புறப்பட்டு மத்தியதரைக் கடலுக்குப்போய் எதிரிகளின் கடற்படைகளை நாசம் செய்துவிட்டு எளிதில் திரும்பிவிடலாம். சூயஸ் கால்வாயையும் எகிப்தின் ஸ்ரேபாக்கியத்தையும் பாதுகாக்க இனி விமானங்களாலேயே முடியும். மேலும் விமானப்பாதுகாப்புடன்தான பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் மத்தியதரைக்கடலில் வேலைசெய்யமுடியும்.

முஸோலினியை மனம்போல் நடக்கவிட்டதன் பலனாலேயே இத்தகைய நிலைமை ஏற்பட்டுள்ளது, பிரிட்டிஷ் அட்மிரால்டியின் பயத்தால் சூயஸ் கால்வாய் இத்தலியக் கப்பல்களுக்கு மூடப்படவில்லை. யுத்த காலத்தில் பிரிட்டிஷ் கப்பல்களைப் பாதுகாப்பது பெரிதல்ல. ஆனல் பிரிட்டனின் ஏகாதிபத்திய அந்தஸ்தைக் காப்பதே பெரிய பிரச்சினையாகும்.

பிரிட்டிஷ் கப்பல்களுக்குமட்டும் சூயஸ் கால்வாயில் முட்டுக்கட்டை போடப்படுமாகில் கிழக்கிலுள்ள பிரிட்டனின் விரோதிகள்பாடு கொண்டாட்டம்தான். அம்மாதிரி முட்டுக்கட்டையால் பிரிட்டனிலிருந்து சிங்கப்பூர் செல்ல 3000 மைல்கள் அதிகமாகப் பிரயாணம் செய்யவேண்டியிருக்கும். அத்துடன் மத்தியதரைக்கடலில் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டுள்ள யுத்தக்கப்பல்களினல் யாதொரு பயனுமேற்படமாட்டாது.

பிரிட்டிஷ் சரித்திரத்தின் இந்தக் காலத்தில் ஆபிரிக்காவின் தென்கோடியிலுள்ள கேப்டவுன் சிறிது நம்பிக்கையை ஊட்டுகிறது. நன்னம்பிக்கைமுனை என்று ஒருகாலத்தில் பெயர்பெற்ற கேப்டவுன் இப்பொழுதும் நன்னம்பிக்கையை ஊட்டுவது குறிப்பிடத்தக்கது. அங்கு ஓர் பெரியகடற்படை ஸ்தலம் அவசியம் கட்டப்படவேண்டும். இனிச் சிங்கப்பூர்க் கடற்படை ஸ்தலத்தால் எதிர்பார்க்கப்பட்ட பலன் கிடைக்க மாட்டாது. சிங்கப்பூர்க் கடற்படை ஸ்தலவேலை இனிப் புறக்கணிக்கப்படுமென்றும் ஓர் வதந்தி உலாவி வருகின்றது.

கேப்டவுனில் புதிய கடற்படை ஸ்தலம் கட்ட 14,000,000 பவுண் வேண்டியிருக்கும். இதில் பாதித் தொகையைப் பிரிட்டிஷ் வரி கொடுப்போர்தான் கொடுக்க வேண்டும். பழையபடி நீண்ட தூரப் பிரயாணத்தைத்தான் பிரிட்டிஷ் கப்பல்கள் செய்யவேண்டியிருக்கும். சிங்கப்பூர் அல்லது ஆஸ்திரேலியா தாக்கப்படுமாகில் உடனே பிரிட்டிஷ் கப்பல்கள் சகாயத்திற்குச் செல்லக் கேப்டவுனில் நல்ல கடற்படை ஸ்தலமிருக்கவேண்டும். ஆபத்தின்றி இந்துமகா சமுத்திரத்தின் மூலம் யுத்தக் கப்பல்கள் உதவிக்குப் போகலாம். சூயஸ் கால்வாய் வழியாகமட்டும் அவை செல்லுமாகில் செங்கடலில் நீர் மூழ்கிக் கப்பல்கள் அல்லது வெடிகுண்டுகளுக்கு அவை இரையாகிவிடுவது நிச்சயம்.

தந்திரோபாயங்கள் மிகுக்க இப்பிரச்னை நீடித்திருக்கும். இராணுவ விமானங்கள் காரணமாக யுத்தகப்பல்கள்பகிரங்கமாகக் கடலுக்குவந்து போராடவேண்டியிருக்கும்.யுத்தக்கப்பல்களில்லாமலும் முடியாது. ஏனெனில் இராணுவ விமானங்களால் நீண்ட தூரம் எங்கும் தங்காமல் பறந்துசெல்ல முடியாது பெட்ரோலுக்காக அவை இறங்கவேண்டியிருக்கும்.

இவ்வளவு சங்கடத்தில் சிறிது தைரியமூட்டத்தக்க விஷய மென்னவெனில் கடற்பாதையிலுள்ள பல துறைமுகங்கள் பிரிட்டன் அல்லது பிரிட்டனின் நேச தேசங்களின் ஆதிக்கத்தில் உள்ளன. ஆகவேபிரிட்டிஷ் கப்பல்கள் வேண்டிய கரி எண்ணெய் முதலியவைகளை அங்கு எத்திக்கொள்ளலாம்.

லண்டனுக்கும் ஸிட்னி (ஆஸ்திரேலியாவில் உள்ளது)க்கு மிடையே நேர் கோடு ஒன்றைப் பூகோளத்தில் கீறினல் அதவே 1869ம் வருஷம் முதற்கொண்டு பிரிட்டிஷ் கடற்படையின் தந்திரோபாயங்கள் நிறைந்த பாகம் என்று தெரியும். ஆனல் முஸோலினி தனது மிருகபலத்தால் பிரிட்டனை அப்பாதையிலிருந்து திரும்பும்படிச் செய்துவிட்டார். இனிப் பிரிட்டிஷ் கப்பல்கள் ஆபிரிக்காவைச் சுற்றித்தான் ஸிட்னிக்குச் செல்ல வேண்டும். இத்தாலியக் கப்பல்களுக்கு முட்டுக்கட்டைபோட பிரிட்டன் சூயஸ் கால்வாயை மூடத் தவறியது. ஆகவே முஸோலினி கால்வாயைப் பிரிட்டிஷ் கப்பல்கள் போகமுடியாதபடி மூடிவிட்டார்.

---

## நீக்ரோவரின் மனக்கசப்பு

### பிரதமமந்திரி சொற்பொழிவின் விளைவு

கேப்டவுன், 5 உ

சமீபத்தில் தென்னுபிரிக்க பிரதம மந்திரி ஜெனரல் ஹர்ட்ஸாக் ஓர் பிரசங்கத்தில் பிரிட்டிஷ் பாதுகாப்பில் இருக்கும் சுதேச நாடுகளைத் தம்முடைய அரசாங்கத்தவர் தங்களுடைய ஆதீனத்துக்குட்படுத்தப் போகிறார்களென்று குறிப்பிட்டார். இதனுல் சுதேச நீக்ரோ மக்களுக்கு மிகவும் மனக்கசப்பு ஏற்பட்டிருக்கிறது. இம் மனக்கசப்பின் பயனுகக் கலகம் ஏற்படக் கூடுமென்று தெரியவருகிறது.

பெச்சுனுலந்து பாதுகாப்பு நாட்டைச் சேர்ந்த ஸெரோவி என்னும் இடத்தில் ஓர் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் சுமார் 600 நீக்ரோக்கள் கூடியிருந்தார்கள். தென்னுபிரிக்காவுடன் சுதேச நாடுகளை இணைப்பது பலமாகக் கண்டனம் செய்யப்பட்டது. பாதுகாப்பு நாடுகளின் நிலைமையை அபிவிருத்தி செய்யத் தென்னுபிரிக்கா அரசாங்கத்தார் 35,000 பவுண் செலவிடுவதாகக் கூறினர்கள். இத் தொகையைக் கூட வாங்கக் கொள்ளக் கூடாதென்று நீக்ரோ தலைவர்கள் சொல்லுகின்றார்கள் தென்னுபிரிக்கா பிரதம மந்திரியின் பிரசங்கத்தின் பயனுக ஏற்பட்ட மனக் கொதிப்பும் சுதேசிகளிடையே தீவிரமாகப் பரவி வருகின்றது. பஸுட்டோலந்து, பெச்சுனலந்து, ஸ்வாஜிலந்து இம்மூன்று சுதேச நாடுகளும் ஒப்பந்தப்படி பிரிட்டனின் பாதுகாப்பிலிருக்கின்றன. மேற் சொல்லிய நாடுகளைத் தென்னுபிரிக்க அரசாங்கத்தார் வசம் ஒப்படைப்பதில்லையென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் திரும்பத்திரும்ப வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்.

தென்னுபிரிக்க அரசாங்கத்தார் பிரிட்டிஷ் பாதுகாப்பிலிருக்கும் சுதேச நாடுகளைத் தங்களுடைய கண்காணிப்புக்கு மாற்றிக் கொள்ளுவதற்கு முன்னர் மிகவும் சாதாரண முறையில் பிரிட்டிஷ் சர்க்காரைக் கலந்து கொண்டால் போதுமென்று ஜெனரல் ஹர்ட்ஸாக் சமீபத்தில் தென்னுபிரிக்க பார்லிமெண்டில் பேசினர்.

# அரசாங்கசபைத் தலைவர் பிரசங்கம்

## "இலங்கையின் பல வகுப்பினரிடையே ஒற்றுமையை உண்டுபண்ணும் பொறுப்பு"

### வெஸ்லிக் கல்லூரிப் பழைய மாணவர் சங்க விருந்தில் நடந்தவை

சனிக்கிழமை இரவில் வெஸ்லிக் கல்லூரிப் பழைய மாணவர் சங்க விருந்து பிரிஸ்டல்ஹோட்டலில் நடைபெற்றது. சங்கத்தின் தலைவரான டாக்டர் எஸ் முத்தையா விருந்துக்குத் தலைமை வகித்தார். அவருக்கு வலது புறத்தில் அரசாங்க சபைத் தலைவரான திரு வை. துரைசாமியும் இடது புறத்தில் மேயர் திரு. டபிள்யு. எல். டர்பியும் உட்கார்ந்திருந்தனர்.

"பல பிரபலஸ்தர்கள் இக்கல்லூரியின் பழைய மாணவர்களாய் இருக்கின்றார்கள். அவர்களில் ஒருவர் எனது நண்பரும் அரசாங்கசபையின் முதல்வருமான ஸர் பரன் ஜெயதிலகாவே. அவர்மேல் மிகுந்த பொறுப்பு உளது. அவர் மந்திரி பதவியை விட்டு விலகுமுன் தீவின் பல வகுப்பினரிடைய்யும் ஒற்றுமையை உண்டுபண்ண வேண்டும்" என்று திரு. வை. துரைசாமி கூறினார்.

மேலும் திரு. வை. துரைசாமி அவர்கள் பேசியதாவது:—

வெஸ்லி கல்லூரியின் வயது எவ்வளவோ அவ்வளவுதான் எனது வயதும் இந்த 62 வருஷ காலத்தில் அதிசயிக்கத்தக்க முறையில் கல்லூரி நாட்டிற்குச் சேவை புரிந்துள்ளது. இலங்கையிற் கல்வி உலகில் இக்கல்லூரி முக்கியமானதும் பொறுப்பானது மான நிலைமையை வகித்து வருகிறது.

நான் வெஸ்லிக்கல்லூரியின் பழைய மாணவன் அல்ல. ஆனால் எனது நண்பர்களும் பலரும் எனது மூன்று சகோதரர்களும வெஸ்லிக்கல்லூரியின் பழைய மாணவர்களாகும். இக் கல்லூரி நிர்வகிக்கும் மெதாடிஸ்டுகளாலேயே கவனிக்கப்படும். யாழ்ப்பாணம் சென்ட்ரல் கல்லூரியிலே நான்படித்தவன். மதபோதனையின்றிக் கல்வியால் வகுப்பிரருக்கும் ஆட்களுக்கும் பயனேற்படமாட்டாது. இக் கல்லூரி மதக் கல்வி போதனை அவசியமென்பதை வற்புறுத்தி வருகிறது.

கல்லூரியின் தலைமை ஆசிரியர் டாக்டர் முத்தையா, திருவாளர்கள் வி. சுந்தரலிங்கம், ஏ. இ. கியுனிமன் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா முதலியோரும் பேசினர்.

---

### சீனமாதின் உபதேசம்

கொழும்பு ஜூலை 13—

நவீன சீன மாதான மிஸ் லீ என்பவர் ஐரோப்பாவுக்குச் செல்லும் பாதையில் இங்கு விஜயஞ் செய்திருந்தார். அவர் இங்கு கொடுக்கப்படும் தேயிலையை அருந்திவிட்டு "அட! பாவமே! தேயிலை விளையும் இந்நாட்டில் நல்ல தேயிலையை நீங்கள் உபயோகிக்கக் கூடாதா? நல்லதெல்லாம் பிற நாடுகளுக்கு அனுப்பிவிட்டுப் போஞ்சான் தேயிலையையா நீங்கள் உபயோகிக்க வேண்டும். தனக்குப் போகத் தானம் என்பது உங்களுக்குத் தெரியாது போலும். சீனாவில் அப்படியில்லை. நாங்கள் முதல் நம்பர்த் தேயிலையைத்தான உபயோகிப்பது வழக்கம்" என்று கூறினர்.

---

### புகைரதம் தங்கிச் செல்லும் தானம்

புகைரதப்பகுதியார் வடபகுதிப் பாதையில் வெள்ளாவிக்கும் குருநாகலுக்கும் மிடையேயுள்ள மாறலுவிவா என்னுமிடத்திற் புகைரதம் சிறிது தங்கிச் செல்வதற்காகிய ஒழுங்கினை இந்த மாசந் தொடக்கஞ் செய்திருக்கிறார்கள்.

---

# வரவுசெலவுத் திட்டப் பரிசிலனை

## இரவு பகல் ஓயாத உழைப்பு

கொழும்பு ஜூலை 13—

அரசாங்க வரவு செலவு திட்டப் பரிசீலனையில் இப்போது மந்திரிமார்கள் வெகு அழுத்தமாகக் கவனஞ் செலுத்தி வருகின்றனர். இரவுபகலாக உழைப்பெடுத்துத் திட்டத்தை உருவாக்க முயன்று வருகிறார்கள். கடந்த சில தினங்களாக மந்திரிமார்களுக்கு வேலை அதிகம். காலை 9-30 மணிக்கு ஆரம்பித்த பரிசீலனை இரவு 8 மணிவரை தொடர்ந்து நடந்தன்றனர். எல்லா மந்திரிகளையும் விடச் சற்று வயதானவர்களான சர். பரனுக்கும் சுகாதார மந்திரிசரும் தான் தொடர்ந்த இம்மாதிரி உழைப்பதில் சற்று அதிசயமேற்பட்டிருக்கும்.

அநேகமாக அடுத்தமாதம் 28 ம் தேதிக்குள் வரவு செலவுத் திட்டப் பூர்த்தியாகிவிடும். ஏனெனின் ஆகஸ்டு 28 ம் தேதி இத் திட்டத்தை அரசாங்க சபையில் சமர்ப்பிப்பதாகக் கடந்த கூட்டத்தில் சர் பரன அறிக்கை செய்து விட்டார். எனவே அதற்குள் பூர்த்தி செய்வதற்காகத் துரிதமாக வேலைகள் நடந்து வருகின்றன.

---

## சிறுவன்காலைச் சுற்றிய பெண் தெய்வம்

### ஆண்டிப்பட்டியில் ஆற்றிலிருந்தகப்பட்ட விக்ரக அதிசயம்

மதுரை ஜூலை 7—

ஆண்டிப்பட்டியில் சுமார் 6 நாட்களுக்கு முன்னுல் ஓர் சிறுவன் தன் இறந்த பெற்றேர் ஒருவரை இடுகாட்டிலிட்டு தகனம் பண்ணிய பிறது அவரது சாம்பலைக் கரைக்கும் பொருட்டு அருகிலுள்ள ஆற்றில் இறங்கி தன் பெற்றேர் விண்ணுலகு எய்தியதனுலுண்டாகிய துக்கம் நெஞ்சை படைக்கவும் வருத்தத்தினுல் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக ஓடவும் தலை குனிந்த வண்ணம் அச்சாம்பலைக் கரைத்தான். அதுசமயம் தன் காலைச் சுற்றி ஏதோ ஒன்று நீரில் வரக்கண்டான். அதைத் தன் கைகளினுல் தண்ணீரில் தள்ள முயன்றன். ஆனல் அது அவனது கால்களைச் சுற்றி வளைய வந்ததேயொழிய வேறெங்கும் செல்லவில்லை. பிறகு அச்சிறுவன் ஆச்சரியத்துடன் அதைக் கையிலெடுக்க அது ஓர் சிறிய விக்கிரகம் எனக் காணப்பட்டது. அதை அவன் அன்புடனெடுத்து தன் சுற்றத்தாருக்கெல்லாம் காட்டினுன். அவ்வமயம் திடீரென ஓர் பெண்ணின் மேல் ஆவேசம் வந்து கண்டெடுக்கப்பட்ட விக்கிரகம் ஓர் பெண் தெய்வமெனவும் அதை அவர்கள் எப்பொழுதும் பூஜிக்கவேண்டிய தென்றும் சொல்லிற்று. அன்று முதல் அவர்கள் அதை வைத்துப் பூஜை செய்து வருகிறர்கள். மேலும் அதைக்காண அக்கம் பக்கத்திலிருக்கும் கிராம ஜனங்கள் திரள் திரளாக வந்து போகின்றர்கள்.

---

## உலகம் பலவிதம்.

(முன்றொடர்)

இராமசாமிப்பிள்ளை வீட்டிற்கு வந்த போது பருவதம் அதிக மனாம்மியத்தோடும் மகிழ்ச்சியுடனும் காணப்பட்டாள். தான் ஏதோசொற்கருஞ் செயலைச்செய்து கொண்டதாகத் தன்னை மதித்துக்கொண்டாள். அவள் அர்ச்சனையத்தில் கொண்டுள்ள குதூகலத்தைக்கண்ட இராமசாமிப்பிள்ளை, "பருவதம் என்ன விசேஷம்?" என்று கேட்டார். "விசேஷம் ஒன்றுமில்லை, பாருங்கள், நீங்கள் வருவீர்கள் வருவீர்கள் என்று நெடுநேரம் பார்த்தேன்; வரக்காணேன்; கைலாசத்திலே தங்கச்சியைக் கண்டுகொண்டு ஒரு பெரியவர் இன்று இங்கே வந்தார். அவருக்கு நான் செய்யவேண்டிய உபசாரமெல்லாஞ் செய்தேன்; அவரைக் கண்டது, எனக்கு தங்கச்சியைப் பாதி கண்டது போற் சந்தோஷமாயிருந்தது; தங்கச்சி எங்களையிட்டுக் கவலைப்படுகிறள் என்றுஞ் சொன்னர்; ஐயோ எங்கள் அருமை ராசாத்தியை நினைக்க அழுகை வருகிறது! அவளுக்குக் கட்டத் துணியில்லையாம், பூணப் பணியில்லையாம், அதனுலே இங்கு நாங்கள் எங்கள் பிள்ளைக்கென்று செய்வித்துவைத்த பூணும் வாங்கி வைத்த புடைவைஎல்லாவற்றையும் பெட்டகத்துளிருந்து எடுத்து ஒரு பொதியாகக் கட்டி அந்தச் சந்நியாசியாரைத் தங்கச்சி வசம் கொடுக்கச்சொல்லிக் கேட்டேன்; அவர் முதல் மறுத்துவிட்டார்; பிறகும் என் பரிதாபத்தைப் பார்த்துவிட்டுப் பாதிமனசோடு வாங்கிக்கொண்டு போகிறர்; எப்படியோ நாளைக்கு இந்நேரம் வரையில் அவைகள் தங்கச்சி கையிற் சேர்ந்துவிடும், அவள் தன் ஆசைதீர அவைகளைக் கட்டிப்பூட்டி அணிந்து கொள்ளுவாள்; என்செய்யலாம் பிள்ளை அப்படிக் கட்டிப்பூட்டி அலங்காரமாய் இருக்கும்போது பெற்றவளாகிய நான் அந்த அழகை நேரில் நின்று பார்க்கக் கொடுத்து........." என்று சொல்லி முடிப்பதற்கிடையில் இராமசாமிப்பிள்ளை இடியேறுண்ட நாகம்போல ஏக்கங் கொண்டு "அடி, சண்டாளி என் குடியை அடியோடு கெடுத்தாயே" என்று சொல்லிக்கொண்டு பக்கத்தே வைக்கப்பட்டிருந்த நாற்காலியில் மெல்லஇருந்துவிட்டார்.

* * *

இராமசாமிப்பிள்ளை சிறிது நேரம் கலங்கினுரேனும் மனத் தைரியத்தை விடவில்லை; எடி, நாசகாலி அந்த வஞ்சகன் போய் எவ்வளவு நேரமிருக்கும்" என்று ஆத்திரத்தோடு பருவதத்தைக் கேட்க, அவள் ஒரு அரைமணிநேரத்திற்கு மேற்படாதென்றள்; உடனே தன் குதிரைலாயத்திற்குப் போனர். தாமாகவே குதிரையைச் சித்தப்படுத்தி ஏறிக்கொண்டு அதிவேகமாக ஒரு வழியைப் பிடித்துச் சென்றர்; கள்வன் சென்றவழியும் அதுதான். இரண்டுமைல் தூரஞ் சவாரி போன பின் ஒரு சந்நியாசி திரும்பிப் பார்த்துப் பார்த்து வேகமாக நடந்து மார்க்கத்தில் நின்ற ஒரு ஆலமரக் கொம்பரிற் பாய்ந்து ஏறியதை இராமசாமிப்பிள்ளை கண்டு கொண்டார். அந்த வஞ்சகன் அவருக்குத் தான் இருக்கக்கூடுமென்ற குறிப்புடன் விரைவாகச் சென்று ஆலமரத்தின் கீழ்க் குதிரையை மறித்துக்கொண்டு மேலே பார்த்தார். கபடசந்நியாசி உந்நதமான கொம்பரொன்றிற் பொதியோடு வசதியாக இருப்பதைக் கண்டார்; இராமசாமிப்பிள்ளை "ஏ, இறங்கு கீழே, இல்லாவிட்டால் என்ன நடக்குமென்பதைப் பார்" என்று தாம் போகும்போது உடன் கொண்டுபோன துப்பாக்கியைக் காட்டினுர்; "உது இங்கும் இருக்கிறது" என்று சொல்லிக் கள்வன் ஒரு துப்பாக்கியைத் தானுங் காட்ட இராமசாமிப்பிள்ளை பயந்துவிட்டார். இராமசாமிப்பிள்ளை துப்பாக்கியைச்சட்டைப்பைக்குள்வைக்க கள்வனும் தன் துப்பாக்கியை ஒருபையுள் வைத்துவிட்டான். இராமசாமிப்பிள்ளை குதிரையை நின்றபடி விட்டுவிட்டுத் துள்ளிப்பாய்ந்து மரக்கொம்பரில் ஏறி மேலும் மேலும் கள்வனிருக்கும் இடத்திற்கு ஏறி ஏறிப்போக, அவன் விரைவாக இறங்கிக் கீழ்க்கொம்பரில் வந்து நின்று குதிரையின் முதுகிற் பாய்ந்து ஏறிக் காற்றேனப் பரியைச் செலுத்திக்கொண்டு சிறிது தூரம் ஓடியபின் குதிரையை நிறுத்தினுன்.

* * *

தன் பொருளும் பரியும் இனிமேல் மீண்டு தமக்கு வரப்போவதில்லையென்பதை யுணர்ந்த இராமசாமிப்பிள்ளை மரத்தினின்றும் இறங்கி அவனைத் தொடர்ந்துசென்று "அப்பா, நான்உனக்கு யாதும் ஊறு செய்யமாட்டேன்; உந்தப் பொருள்களை என் மகளிடம் கொடுக்கும்போது யார்தந்ததென்று சொல்லிக் கொடுக்கப்போகின்றய்" என்று கேட்க, "உன் அம்மான் தந்ததென்று சொல்லித்தான் கொடுப்பேன்..." என்று பதில் சொன்னுன். "சரி அதை அப்படிச் சொல்லிக்கொடு; ஆனல் உந்தக்குதிரையை உன் ஐயா தந்தார் என்று சொல்லி என் மகளிடங் கொடுத்துவிடு" என்று சொல்லிவிட்டுக் கவலையுடன் மீண்டார்; கள்வனும் சந்தோஷத்துடன் தன்னுடைய இடத்திற்குப் போனுன். ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர் என்ற ஆப்த வாக்கியம் உண்மையெனபது இராமசாமிப்பிள்ளைக்கு அன்றுதான் புலப்பட்டது.

---

# பொதுத் தேர்தல் எதிரொலி

## 'சுடுவோம்'எனப் பயமுறுத்தியதாக வழக்கு

### முல்லைத்தீவுக்கோட்டில் விசாரணை

## தேர்தல் வேலைகளில் அரசாங்க உத்தியோகஸ்தர்களும் பங்குபற்றலாமா?

மேலேசொல்லப்பட்ட விஷயமான வழக்கு, சென்ற வெள்ளிக்கிழமை முல்லைத்தீவுப் பொலிஸ் நீதிஸ்தலத்தில் விசாரணை செய்யப்பட்டது இதில் (1) K- கவரத்தினம் (2) V. நிச்சேட் என்னும் ஒரு உபாத்தியர் (3) S. சதாசிவம் என்னுமிவர்கள் திரு. ஸ்ரீபத்மநாதன் பக்கமாக டக்டர் சிவசிதம்பரத்திற்கு விரோதமாக, பொதுநிதித் தேர்தற்காலத்தில ஆறுமுகம் கந்தையா என்பவரைத் துப்பாக்கியாற் சுடுவோம் எனப் பயம் என வெருட்டினர்களென அவர்களுக்கு விரோதமாகடிஸ்திரிக் முதலியார் ஸ்ரீ. A. M. கனகசபாபதியவர்கள் வழக்குத் தொடர்ந்துள்ளார். ஆறுமுகம் கந்தையா என்பவர் சொல்லிய சாட்சியம் வருமாறு:

"தேர்தற் காலத்தில் நான் டக்டர் சிவசிதம்பரத்திற்காகவே வேலை செய்தேன்; என் பொறுப்பில் அவர் ஒரு கார் விட்டிருந்தார். அந்தக் காரைக் கொண்டு வாக்காளரைச் சேர்ப்பதற்கு ஓடித் திரிந்தேன்; தனியூற்றுக்கு நானும் இன்னும் இருவரும் ரதத்திற்குப் போகும்போது முதலாமெதிரி (கவரத்தினம்) ஒரு சந்தியில் வந்து எங்கள் ரதத்தைத் தடுத்தார். அவர் கையில் வைத்திருந்த துப்பாக்கியைக்காட்டி இந்த இடத்தில் நீ டக்டர் பொருட்டு ஆட் சேர்த்தால் கட்டாயம் சுடுவேன் என்று வெருட்டினுர். 2 ம் எதிரியாகிய நிச்சேட் ஒரு பொல்லுடன் வந்து நின்றர். இவைகளைக் கண்டு சம்மதஞ் சொல்வோர் பயப்பட்டனர். நாங்கள் முல்லைத் தீவிற்கு மீண்டோம். எதிரிகளும் ஒரு மோட்டாரதத்தில் எங்களைத் தாரத்து வந்துபிடித்து இடைவழியில் மறித்துக் குறித்த விஷயத்தையாருக்காயினும் போய் முறையிட்டால் கட்டாயம் கெடுதி செய்வோம என்று வெருட்டினர்.

இப்படி நிற்கும்போது முல்லைத்தீவிலிருந்து ஒரு பஸ் அந்த இடத்திற்கு வர அதனைக்கண்டு எதிரிகள் மெல்ல நழுவி விட்டனர். அந்த பஸ் டக்டர் சிவசிதம்பரத்தின் ஆட்களை ஏற்றித் திரிந்ததாகும்; நடந்த சமாசாரம் முழுவதையும நான போய்ப் பிறக்டர் சபாரத்தினத்திடம முறையிட்டேன்.

அரசினர் கீழ் உத்தியோகத்தரும் தேர்தலில் உழைக்கலாகுமா?

முல்லைத்தீவுக் கச்சேரி கிளார்க்காகிய சேதுபதி சொன்ன சாட்சியம்:—

முதலாம் இரண்டாம் எதிரிகளை நான் அறிவேன்; சம்மதஞ் சொல்லும் தினத்தன்று இவ் வெதிரிகள் ஸ்ரீபத்மநாதனுடைய பக்கமிருந்தே வேலை செய்யக் கண்டேன். பத்தனுக்கு கிட்டி நான் போனபோது இரண்டெதிரிகளும் ரதத்திலிருந்து இறங்கி வரக்கண்டேன்; கவரத்தினத்தின் கையில் ஒரு துப்பாக்கியும் நிச்சேட் சட்டம்பியார் கையில் ஒரு பொல்லும் இருப்பக்கண்டேன். துப்பாக்கியைக் கையிற்கொண்டு நீர் திரிவதன் நோக்கமென்ன என்று முதலாம் எதிரியை நான் வினவ, அவர் நான் சுடப்போகின்றேனென்றுர். இப்படிப்பட்ட நேரத்திலே துப்பாக்கியைச் சனங்கள் கண்டாற் பயப்படுவார்களாதலால் நீர் இப்படிக் கொண்டுதிரிவது சரியல்லவென்று சொன்னேன்; இக்காரியத்தை நான் சபாரத்தினத்திற்குச் சொன்னபோது இவர்கள் கலகமுண்டாக்கும் நோக்கத்துடன் திரிகிருர்கள் போலும் என்று எனக்குச்சொன்னர்

குறுக்கு விசாரணையில் அரசினர் கீழ் உத்தியோகமாய் இருப்பவர் இப்படிப்பட்ட தேர்தல் விஷயத்தில் பங்குபற்றலாமோ என்று கேட்ட போது, பங்கு பற்றக் கூடாதுதான்; ஆனல் இரகசியமாகச் செய்வதுண்டு என சகோதரர், டக்டர் சிவசிதம்பரத்தின் பொருட்டு வேலைசெய்தவர்.

பிறக்டர் ஸ்ரீ த மு. சபாரத்தினம் சொல்லிய சாட்சியம்:

"குறித்த தேர்தலில் நான் டக்டர் சிவசிதம்பரத்தின் பொருட்டு முயற்சி செய்தேன்; மார்ச்மீ 7உ முல்லைத்தீவில டக்ருடைய பந்தரின்கீழ் நின்றேன; இந்த எதிரிகளைச் சுட முயன்றனரென்ற பாக்கியம், தம்பிப்பிள்ளை, கந்தையா என்னுமிவர்கள் எனக்கு முறைப்பட்டார்கள்; டக்டர் பக்கமாக இவர்கள் வாக்காளரைச் சேர்த்தார்களென்பதே எதிரிக்கு இவர்கமீன் தள்ள ஆத்திரம்; இதனுல் வாக்காளர் பலர் சிட்டிடுக்தானத்திற்குப் பயந்து வீட்டிலேயே நின்று விட்டனர். எதிரி செய்த அடாத செயலை எனக்கு முறையிடும்படி முல்லைத்தீவிற்கு மீண்டு வருவதற்கு இவர்கள் எத்தனித்தபோது இந்த எதிரிகள் இவர்களை வெருட்டித் தடுத்தனராம். அந்த முறைப்பட்டைத் தலைமைக்காரனுக்கு முறையிட்டால் தலைமைக்காரன எதிரிகளைப் பிடித்து அடைக்க முயற்சி செய்வாரென்று நான் அவர்களுக்குப் புத்தி சொன்னேன; இவர்கள் தனியூற்றுக்குப் போகப் பயப்பட்டமையினுல் நான் இவர்களை வற்றுப்பளைக்குப் போகச் சொன்னேன.

குறுக்கு விசாரணையிற் சொல்லிய சாட்சியம்

"டக்டர் சிவசிதம்பரம் எனக்கு மாமன் முறையுண்டவர்; டக்டர் அங்கே வருவதற்கு ஒருமாசம் முந்தியே நான வாக்காளரை டக்டருக்குச் சம்மதஞ் சொல்லும்படி உடன்படுத்தினேன. இரண்டாம் எதிரியாகிய நிச்சேட்சட்டம்பியாரை டக்டர் பொருட்டு வேலைசெய்யும்படி நான் கேட்கவில்லை; அவர் கத்தோலிக்க சமையத்தவர்; கத்தோலிக்கர் ஸ்ரீ. பத்மநாதனையே ஆதரித்தவர்களவர்.

இவ்வழக்கில் வேறுஞ் சிலரைச் சாட்சிகேட்டபின் நீதிபதி ஜூலை மீ 24-ந் திகதிக்கு விசாரணை செய்வதாகத் தவணையிட்டார்.

---

# திருவிழாவிற் தீ விபத்து

## 13 கடைகள் தீக்கிரையாயின

திருக்கோணமலை ஜூலை 12

தம்பலகாமம் என்ற ஊரில் பல இனிப்புப் பதார்த்தங்களும குளிர்ந்த பானங்களும் உள்ள 12 கடைகளும் ஓர் ஜவுளிகடையும் சென்ற வியாழனன்று மாலை தீக்கிரையாயின. ஜவுளிக்கடையில் சுமார் ரூ 400 மதிப்புள்ள துணிகள் இருந்தன கோணைநாயகர் கோவில் உற்சவம் மேற்படி கிராமத்தில் நடந்துவருகிறது. ஜனங்கள் தீயை அணைக்க முயற்சித்தும், காற்றின் வேகம் காரணமாகத் தீப் பரவியது

தீப்பற்றியதற்குக் காரணம் தெரியவில்லை. ஆனல் கடைகளின் ஒரு மூலையில தீப்பற்றியது. அங்கு சில இனிப்புப் பதார்த்தங்கள் தயாரிக்கப்பட்டு வந்தன. தீப் பொறி தென்னங் கீற்றுகள் மேல் பட்டு தீ பரவியிருக்கக் கூடும்

வண்ணைநகர்

தையல் நாயகி

கலிவெண்பா

திருவூஞ்சல்

முத்துக்குமாரசுவாமி

திருவூஞ்சல்

இவை இப்பொழுது தெளிவாக அச்சிடப்பெற்று ஒரே பிரதியாக வெளிவந்துள்ளன.

விலை சதம் 5

மானேஜர்,

சைவப்பிரகாசயந்திரசாலை,

வண்ணார்பண்ணை.



வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம் அர னாமமே
சூழ்க வையக மூந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: தாதுஸ்ரீ ஆடிமீ கஉ வியாழக்கிழமை

## வித்தியா பரிபாலனம்

இலங்கைப் பிரதிவித்தியாதிகாரியாகிய மிஸ்ரர் ரேபிஸன் சென்ற ஆண்டிற்குரிய வித்தியாபரிபாலன அறிக்கைப்பத்திரத்தை இற்றைக்குச் சிலவாரங்கட்கு முன்னர் வெளியிட்டிருக்கின்றார். இவ்வறிக்கைப்பத்திரத்தில் வெளியிடப்பட்டுள்ள விஷயங்களுட் பிரதானமான சிலவற்றைப் பற்றி முன்னரும் இப் பத்திரிகையில் எடுத்துக்காட்டியுள்ளோம். நமது அரசினர் இலங்கையில் ஊட்டிவருங் கல்வி விஷயத்தில் பிரதானமானசில குறைகள் உண்டென்பதே இலங்கை மக்களுள் விஷயமறிந்தவர்களின் முறையீடாகும். நமது அரசினர் இவ்விலங்கையைக் கைப்பற்றி 150 வருடங்கள் வரையிற் சென்றும் இன்னமும் இங்கே உயர்தரக்கல்வியூட்டப்படுதற்கான ஒழுங்குகள் செய்யப்படவில்லையென்பது ஒரு பெருங் குறை. இந்த நாட்டிற்கு இயைந்த கல்வியையூட்டத்தக்க ஏற்பாடுகளுடன் ஒரு சொந்தமான சர்வகலா சங்கம் தாபிக்கப்படும்வரையில் இந்தப்பெருங்குறை நீங்கப்போவதில்லை.

இரண்டாவதாகவுள்ள குறையென்னையெனில் இலங்கை மக்களின் சுதேசபாஷைகளாகிய தமிழ் சிங்களம் இவற்றுள்ளும் பிரதானமாகத் தமிழ் மொழி காலந்தோறுங் குன்றிக் குன்றி இப்பொழுது ஆரம்பக்கல்வியோடு மாத்திரம் நிற்பதோடு அமையாது விபரீதக் கல்வியாக மாறிவிட்டமையேயாகும். இத் தமிழ்க்கல்வியைப் பூர்வத்திலிருந்த உயர்தரக்கல்வி நிலைமைக்குக் கொண்டுவராவிட்டால் யாழ்ப்பாண மக்களுக்குக் காலகதியில் தமிழ் பேசுதற்கும் ஏதும் எழுதுதற்குந்தான் பயன்படும். தாய்மொழியாகிய தமிழை விருத்தி செய்தற்கான முறைகளையெல்லாம் அதிகாரிகள் ஆவசியகம் செய்துவைத்தல் வேண்டும்.

மூன்றாவதாகவுள்ள குறையென்னையெனின் இங்கு ஊட்டப்படுங் கல்வி எவ்வகையான ஊதியத்தையும் இக்காலத்திற் பயக்கமுடியாத நிலைமையில் ஏட்டுச்சுரக்காய் போல் இருக்கின்றது. இக்கல்வி முறையை அறவே தவிர்த்துக் கைத்தொழில் கமத்தொழில் வியாபாரம் என்னும் இவைகட்காகிய கல்வியை ஆவசியகம் ஊட்டமுயலுதல் வேண்டும். இந்த விஷயத்தை அதிகாரிகள் சொல்லளவில் மாத்திரம் வைத்துக்கொள்கின்றார்களே யல்லாமல் செயலளவில் யாதுஞ்செய்யக்காணோம்;

நான்காவதாக, இங்கு ஊட்டப்படும் ஆங்கிலக் கல்வியைப் பிள்ளைகள் பயிலுஞ் செலவு காலந்தோறும் அதிகப்பட்டு வருகின்றதேயன்றிக் குறைந்தபாடில்லை. எந்த நாட்டில் இலவசமான கல்வி பயிற்றப்படுகின்றதோ, எந்தத்தேசத்திற் கல்விச்செலவு மிகவுங்குறைந்ததாகவிருப்ப ஏழைப் பிள்ளைகளும் கஷ்டமின்றிப் படித்தற்கான வசதிகள உண்டோ அந்த நாடே, அத்தேசமே உண்மையிற் சீர்திருந்திய தேசமாக மதிக்கப்படும். அப்படியான பரிபாலனத்தைச் செய்யும் அரசினரே நாகரீகமான அரசினராவர்.

இலங்கையிலே அரசினர் கல்விக்கென்று பெருந்தொகையான அரசிறை வருவாய்ப்பணத்தைச் செலவிட்டு பலவிதமான தாபனங்களை அமைத்து எண்ணிறந்த பிரமாணங்களையும் கட்டுப்பாடுகளையும் விதித்து ஈற்றில் ஆரம்பக்கல்வியோடு மாத்திரம் நின்றுவிடுதல் "மலை வயிறுநொந்து சுண்டெலியை ஈன்றதுபோலாகும்"

## கலாசாலைகளிற் சமயக்கல்வி

சென்ற வெள்ளிக்கிழமை யன்று நாலந்தா வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின்போது நமது தேசாதிபதி அவர்கள் ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தியுள்ளார்கள். அக்கல்லூரித் தலைமையாசிரியர் திரு. ஜே. என். ஜினேந்திரதாஸ் அவர்கள் கல்லூரிகளில் சமயபோதனை மிக அவசியம் என்பதை மிக நன்றாக வற்புறுத்திக் கூறியுள்ளார். அவர் கூறியுள்ளனவற்றைத் தேசாதிபதி அவர்களும் ஆமோதித்துள்ளமை அவதானிக்கற்பாலது.

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழா அரெனின்" என்பது வள்ளுவப் பெருந்தகையார் திருவாய்மலர்ந்தருளிய அமிர்த வாக்காகும். "ஒருவன் தன்னை அறியப்பெறாது உலகம் முழுவதையும் பெறினும் அதனால் அவனுக்கு என்ன பயன்?" என்பது ஏசுநாதர் உபதேசமாகும். இவ்வாறே ஒவ்வொரு மதப்பெரியாரும் "இறைவனை யறியப்பெறாமல் இவ்வுலகில் எத்தகைய செல்வத்தையேனும் கல்வியையேனும் பெறினும் அதனால் ஆம்பயன் ஒன்றுமில்லை" என அறை கூவுகின்றனர். அன்றியும், சமயக்கல்வி மிகமிக இன்றியமையாதது என்பது எமது ஆன்றோர் எமக்கு அன்றுதொட்டின்றுவரை புகட்டி வரும் அரிய உபதேசமுமாகும். ஆயின், நாஸ்திகம் மிகுந்துள்ள இக்காலத்தில்—உலோகாயதமே உலகிற் சிறந்த மதமாகக் கொள்ளப்பெற்றுள்ள இக்காலத்தில்—சமயக்கல்வியைப்புறக்கணிக்கும் மனப்பான்மையும் மக்களிடையே அதிகரித்து வருகிறது. இளம்பிராயத்திலேயே சமயக் கல்வியின் மூலம் சிறார்க்கு நல்ல பழக்கங்களையும் பாவத்திற்கு அஞ்சி நடக்குங் குணத்தையும் பழக்குவதால் அவர்கள் ஒழுக்கத்திற் சிறந்தோராக வளர்கின்றனர் என்பது சமயக் கல்விக்குச் சார்பான கருத்துடையோர் எடுத்துக்காட்டும் நியாயமாகும். கலாசாலைகளிற் சமயக் கல்வி போதிக்கப்படக்கூடாதென்போரும், சிறுவர்களுக்கு இளம்பிராயத்திலேயே பயவுணர்ச்சியை உண்டாக்கி அவர்கள் இயல்பான வளர்ச்சியை மறுபடுத்தல் கூடாது என்று கூறுகின்றனர். இருசாரார் கோக்கங்களும் நன்னோக்கமாகவே காணப்படுகின்றன. ஆயின சமயக் கல்வி பயவுணர்ச்சியை உண்டுபண்ணும் என்பது ஆதாரமற்ற கூற்றாகும். சமயக்கல்வியின மூலமே அச்சமின்மை அதிகமாக உண்டாகும் என்பதைப் பெரியோர்களது வரலாறுகள் நமக்குக் கரதலாமலகம்போற் றெரிவிக்கின்றன. "நாமார்க்குங்குடியல்லோம்" என்று கூறியவர் ஒரு சமயகுரவர் என்றால், சமயக்கல்வி போதிக்கும் அச்சமின்மை பற்றி அதிகம் கூறவும் வேண்டுமோ?

சமயப்பற்றும் பெரும்பாலும் இளைஞரது பிறவியையும், அவர்கள் சமூகப்பழக்க வழக்கங்களையும் சூழல்களையும் பொறுத்ததாகும். மேனாடுகளில், மக்களுக்குச் சமயாபிமானம் மிகக் குறைவாகும். ஆயின், கீழ்நாடுகளிலோ, அதிலும் இந்தியா இலங்கை ஆதியாம் இடங்களிலோ இளைஞர்களுக்குக் கலாசாலைகளிற் சமயக் கல்வி கற்பியாதொழியினும், அவர்கள் இயல்பாகவே தமது பெற்றோரிடமிருந்தேனும், தத்தம சமய அறிவைப் பெற்று விடுகின்றனர். ஆயின், இத்தகைய நாட்டிற் சமயம் கற்பிக்கின்றோமென்ற நியாயத்தை ஆதாரமாகக்கொண்டு பிறமதத்துப் பிள்ளைகளைத் தம் மதத்திற்கு ஈர்க்கும் மதப்போதகர்கள் செயலே பலருக்குச் "சமயக் கல்வி கலாசாலைகளில் அவசியமில்லை" என்று கூறுமாறு தூண்டி வருகின்றது. இந்நிலைமை அறவே ஒழிதல்வேண்டும். விரிந்த சமயக் கல்வி போதிக்கப்படல் வேண்டும். மதத்துவேஷத்திற்குப் பதிலாக, எம்மதத்திலும் பெரும் உண்மைகள் போதிக்கப் பெற்றுள்ளன, ஆகலின், பிறமதங்களை நாம் முனிந்து நின்று தூஷித்தல் கூடாது என்ற விரிந்த கருத்து மாணவர் மனத்திற் பதியுமாறு போதிக்கப்படுதல் வேண்டும். அது நிகழ்ந்தால் மட்டுமே, உண்மைச் சமயக்கல்வி போதிக்கப்படுகின்றது என்று கூறுதற் கிடமுண்டு. அன்றிச் சிறுவர்கள் பகுத்தறிவெய்தாத அத்துணைச் சிறுபிராயத்திலேயே பெரிய மனிதரையே மலைக்கச்செயயும் சமயக் கருத்துக்களை வலிந்து புகுத்தி அவர்தமமைத் தத்தம சமயத்திற்குத் திருப்ப முயல்வோரால் அளிக்கப்படும் சமயக்கல்வி உண்மையிற் கண்டிக்கத் தக்கதேயாம். இதனாலேயே, பெற்றோரின் அபிப்பிராயத்தைத் தழுவிக் கல்லூரிகளிற் சமயக்கல்வி போதிக்கப்பெற்று வருகின்றதை நாம் காண்கின்றோம். விரிந்த நோக்குள்ள சமயக்கல்வி நமது கலாசாலைகளிற் கற்பிக்கப்படும் நாளை நாம் அவாவி நிற்போமாக.

## கஞ்சா வைத்திருந்தோருக்கு மறியல்

யாழ்ப்பாணம் உபநீதிபதி திரு S. றெட்றிக்கோ முன்பாக மதுப்பரிசோதகர் திரு. F. M. துறேஸிங் என்பவர் ஆனையிறவுப் புகைரத ஸ்தானத்தில் 3ம் வகுப்புப் பிரயாணிகள் செல்லும் வண்டி ஒன்றில் மயிலிட்டியில் வசிக்கும் தம்பையா—இராமசாமி என்பவர் ⅞ அவுன்ஸ் கஞ்சா வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டார். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டான். எதிரிக்கு 8 மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. எதிரியைப் பிடித்து வைத்திருந்தபோது எதிரி பாதுகாப்பிலிருந்து தப்பியோடியதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டார். எதிரி அக்குற்றத்தையும் ஒப்புக்கொண்டார். அதற்காக எதிரிக்கு மற்றுமொருமாத மறியல் தண்டனை விதிக்கப்பட்டது.

## கவர்மெண்டு பத்திரத்தைத் தின்ற பசு

பென்ஷனருக்கு நேர்ந்த நஷ்டம்

ரணகாட், ஜூலை 10

கவர்ன்மெண்டுபென்ஷனரான ஸ்ரீமான் கேதர்நாத் முகர்ஜி அவரது வீட்டுத் தாழ்வாரத்தில் ஒரு மேஜைமீது 1000 ரூபாய் கவர்ன்மெண்டுப்பத்திரத்தைவைத்துவிட்டு அதன் வட்டியை வாங்கிவரத் தீர்மானித்துச் செல்ல உடை உடுத்திக்கொள்ள உள்ளே சென்றார். இதற்குள் ஒரு பசு அங்கு வந்து அந்தப் பத்திரத்தை மென்று தின்றுவிட்டது. பென்ஷனர் உடுத்திக்கொண்டு வெளியே வந்து பார்த்தார். பத்திரத்தைக் காணவில்லை. தாம் சம்பாதித்து வைத்த இந்த ஒரு சொத்தும் இவ்விதம் போய்விட்டமைபற்றி அவர் மிகவும் வருந்தினார்.

## அதிசய குரு பக்தி

பஞ்சாப் ஹஜ்ரா ஜில்லாவில் ஒரு சந்யாசி மரணமடைந்தார். அவர் வியோகமான செய்தி ஒரு திருவிழாவுக்குச் சென்றிருந்த சீடனின் காதில் பட்டது. 'நான் குருநாதன மலரடிகளை அடைவேன்' என்று அந்தச் சீடன் கூறி அக்கணமே விழுந்து மூர்ச்சையாகிவிட்டான். ஆதமாரத்த குருவின் சடலத்தையும் அத்தியந்த சீடனின் உடலையும் வெகு பக்தியோடு மக்கள் ஊர்வலமாக எடுத்துச் சென்று ஓரே சிதையில் அடுக்கி ஈமச் சடங்கு செய்தனர்.

# மதக்கல்விக்கு முக்கியஸ்தானம்

## நாலந்தக் கல்லூரிப் பரிசளிப்பில் தேசாதிபதி சொற்பொழிவு

### தலைமையாசிரியர்உரைக்குஆதரவு

சென்றவெள்ளிக்கிழமை நாலந்தா வித்தியாலயத்தின் வருஷாந்தப் பரிசளிப்பு விழா மே. த. கவர்னர் தலைமையில் கொண்டாடப் பட்டது. தேசாதிபதிவர்களுடன் கல்லூரியின் தலைமை ஆசிரியர் திரு ஜே. என். ஜினேந்திரதாஸா அவர்களால் வரவேற்கப்பட்டார். மாணவர்கள் படை அணிவகுப்பைப் பார்வையிட்ட பின் தேசாதிபதி கல்லூரியின் மேல்மாடி மண்டபத்திற்குச் சென்றார். அங்கு பல பிரமுகர்கள் கூடியிருந்தனர்.

### மதக் கல்விக்குப் பிரதம ஸ்தானம்

பிரார்த்தனை கீதத்துடன் கொண்டாட்டம் ஆரம்பிக்கப் பட்டது. பிறகு தலைமை ஆசிரியர் திரு.ஜினேந்திரதாஸா தமது அறிக்கையை வாசித்தார். அதில் அவர் குறிப்பிட்டிருந்ததாவது:—

நூற்றுக்கு 99 9 விகிதம் பௌத்த மாணவர்களடங்கிய இக் கல்லூரியில் மதக் கல்விக்குப் பிரதம ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எங்கள் மத வாழ்க்கையின் முக்கியமான தத்துவம் தொண்டு புரிவதாகும். மலேரியாக் காலத்தில் எங்கள் சமூகசேவா சங்கம கிராமவாசிகளிடையே பாராட்டத்தக்க சேவை செய்திருக்கிறது.

தக்கசமையமுள்ள நிலைமையில் உயர்தரக் கல்வியில் இலங்கைத் தேசசரித்திரம் பூகோளம் ஆகியபாடங்கள் சேர்க்கப்பட்டதால் மாணவர்களுக்கு உண்மையான தேசியக் கல்வி அளிக்கப்படுவதில்லை. அதிக மாணவர்கள் இருக்க வேண்டு மென்ற நினைப்பினால் பள்ளிக் கூடங்களில் தகுதி இல்லாதவர்களும் சேர்க்கப்படுகின்றனர் இதனாற் பரீட்சையில் தேறுதவர்களின் தொகை அதிகமாகிறது அரசாங்கத்தாரால், போலிஸ் இலாகா இன்ஸ்பெக்டர்கள் நியமனங்களில் மாணவர் படைப் பயிற்சி பெற்ற அபேட்சகர்களுக்கு முதல் உரிமை இருக்கும்படி செய்தால் மாணவர் படைத் திட்டத்தில் யாவருக்கும் ஊக்கமும் உற்சாகமும் ஏற்படும். இலங்கையில் படித்த மக்களிடையே வேலையில்லாத்திண்டாட்டம் மிக அதிகமாயிருக்கிறது. இலங்கைக்கு ஒரு நிரந்தரமான சைனியம் ஏற்படுவதாயிருந்தால் பல இளைஞர்கள் அதில் உத்தியோகம் பெறக்கூடும்.

### செல்வ நிலைமை சீராகவில்லை.

பரிசுகள் வழங்கப்பட்ட பின் தேசாதிபதி அவர்கள் செய்த தலைமைப் பிரசங்கத்தின் சாரம்வருமாறு:-

இக்காட்டுப் பள்ளிக்கூடங்களில் செல்வ நிலைமை சீராக இல்லை ஏற்கனவே குறைந்த சம்பளம் வாங்கும் ஆசிரியர்களின்சம்பளங்களைக்குறைப்பது நியாயமாகாது. மாணுக்கர்களுக்கு அதிகச் சம்பளம் விதித்துப் பெற்றோர்களின் சுமையை அதிகப்படுத்துவது சாத்தியமில்லை. ஆகவே பள்ளிக்கூடங்கள் வழக்கம்போல் "கறவைப் பசுவான" அரசாங்கத்திலிருந்து பண உதவி எதிர்பார்ப்பது ஸஹஜமே. ஆனல் அரசாங்கம் ஏற்கனவே கல்வி விஷயத்தல் பெரியாரியாகச் செலவுசெய்து வருவதைப் பொதுஜனங்கள் அறியவேண்டும் அரசாங்கத்தார் ஆரம்பக் கல்விக்கே முக்கியமாக உதவிசெய்ய வேண்டும். உயர்தரக் கல்விக்கு ஆதரவளிக்கவேண்டியது பொதுஜனங்களின் கடமை. மேல் நாடுகளில் தனவந்தர்கள் தங்கள் பெயர்களை நிலைநாட்டப் பாடசாலைகள் ஏற்படுத்துவதையே சிறந்த வழியாகக் கொண்டிருக்கின்றனர். அம்மாதிரியே இலங்கையிலும் பணமுள்ளவர்கள் கல்வி ஸ்தாபனங்களுக்கு நன்கொடை யளித்தற தேசமக்கள் அவர்களை என்றும் மதிக்கும்படி செய்யவேண்டும் என்று தலைமை ஆசிரியர் கூறியதை நான் முற்றிலும் ஆமோதிக்கின்றேன். இலங்கைச் சர்வகலாசாலை விஷயத்திலும் பொதுஜனங்களின் ஆதரவு விசேஷமாக இருந்தால்தான் வெற்றிகரமாக இருக்கக்கூடுமென்பது எனது அபிப்பிராயம்.

### தேசாதிபதியின் மகிழ்ச்சி

மதக் கல்விக்கும் நீதி போதனைக்கும் முக்கிய ஸ்தானம் அளிக்கப்பட்டிருப்பதாகத் தலைமை ஆசிரியர் கூறியது எனக்கு மகிழ்ச்சியளித்தது. தற்காலக் கல்விமுறையில் மதபோதனை உரிய இடம்பெறாதே அமைதியற்ற நிலைமைக்கும் குற்றங்கள் அதிகரிப்பதற்கும் காரணமென்பது எனது அபிப்பிராயம். மதக்கல்விப்போதனையிலும் சமூகசேவையிலும் இக்கல்லூரிசெய்துள்ள வேலையை நான் பாராட்டுகிறேன்.

தேசாதிபதி பேசிமுடித்ததும் திங்கட்கிழமை கல்லூரிக்கு விடுமுறை வழங்கியிருப்பதாகத் தலைமை ஆசிரியர் அறிவித்தார்.

திரு. டபிள்யூ. ஏ. டி. சில்வா (சுகாதாரமந்திரி) தேசாதிபதிக்கு வந்தனோபசாரம் கூறினர். இந்தக் கொண்டாட்டத்திற்கெனவே இயற்றப்பட்ட ஒரு கீதம் பாடப்பட்டுக் கூட்டம் இனிது கலைந்தது.

## கத்திக்குத்து வழக்கு

வழக்குத் தவணையிடப்பெற்றது

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில சென்ற 14-7-36 செவ்வாய்க்கிழமை நவாலியூரில் வசிக்கும் அந்தோனிப்பிள்ளை என்பவனுக்கு அவ்வூர் நாகமுத்து இராசும் தம்பிராசாவுமாகப் பொல்லால் அடித்தும் கத்தியால் வெட்டியும் காயப்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டிய வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

யோசேப் ஞானப்பிரகாசம் கூறிய சாட்சியமாவது:—

நேற்று 13-7-36 பிற்பகல் 5மணியளவில் நான் ஓர் சயிக்கிளில் இச் சம்பவம் நடந்த இடத்தால் போனேன். போகும்போது 1ம் எதிரியும் அந்தோனிப்பிள்ளையும் ஒருவருக்கொருவர் பிடிபட்டுக்கொண்டு 1ம் எதிரி அந்தோனிப்பிள்ளைக்கு ஓர் பொல்லால் அடித்ததையும் கண்டேன். 1ம் எதிரி அடித்தபோது அந்தோனிப்பிள்ளை 1ம் எதிரியிடமிருந்து பொல்லைப் பறித்தார். அப்போது 2ம் எதிரியினுடைய நெற்றியில் பொல்லுத்தாக்கிற்று. இதன்பின் பொல்லு நிலத்தில் விழுந்துவிட்டது.

இதற்கிடையில் 1ம் எதிரி தனது மடியிலிருந்து ஓர் விரித்த வில்லுக்கத்தியை எடுத்து அந்தோனிப்பிள்ளைக்கு குத்த எத்தனித்தார். அப்போது அந்தோனிப்பிள்ளை கையை உயர்த்தினர். அவருடைய கையில் காயமுண்டாயது. 2ம் எதிரி தான் கோட்டுக்குச் சமூகமளித்தார். தான் குற்றவாளியல்ல வென்று கூறினர். நீதிபதி எதிரியை 200 ரூபா பிணையில் போகும்படி சொல்லி வழக்கைத் தவணையிட்டார்.

# கற்பழிக்க எத்தனித்ததாக வழக்கு

## "எதிரி சமையலறைக்குள் நுழைந்து தாம்பூலந் தரித்தார்"

யாழ்ப்பாணம் சுப்ரிம் கோட்டில் சென்ற தை மீ 28ம் திகதி மக்துவிலில் வசிக்கும் சிதம்பரப்பிள்ளை சபாபதி என்பவன் அவ்வூர் அப்புக்குட்டியின் மகள் இராசமணி யென்னும் 12 வயதுச் சிறுமியின் கற்பை அழிக்க எத்தனித்ததாகக் குற்றஞ்சாட்டிய வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது:—

எதிரியின் சார்பாக திரு. S. D. தம்பு துரைச்சாமியும், திரு. குணம் ஸ்பென்சரும், திரு. C. R. தம்பையாவும் வாதித்தனர்.

என்னையும் எனது சகோதரி குங்குமத்தையும் செல்லமுத்து தனது வீட்டுக்குக் கூட்டிச்சென்றாள். அன்று செல்லமுத்து ஓர் இழவு வீட்டுக்குச் சென்றாள். அவளுடைய புருஷன் சாவகச்சேரிக்குச் சென்றார். நாங்கள் ஓர் கொட்டிலில் இருந்து விளையாடிக்கொண்டிருந்தோம் இப்படி விளையாடிக்கொண்டிருக்கும் போது எங்கள் தாயார் அப்பம் கொண்டு வந்து தந்தாள். அப்பம் தந்துவிட்டு அவள் போய்விட்டாள். நான் அப்பத்தைச் சாப்பிடுவதற்காக எனது சகோதரி குங்குமத்தை வரச் சொல்லிக் கூப்பிட்டேன். அவள் தான் மலசலம் கழித்துவிட்டு வருவதாகக் கூறிவிட்டுச் சென்றாள். நான் தேநீர் வைக்கிறதற்கு ஓர் முட்டியில் தண்ணீர் வார்த்துச் சமையலறையில்கொண்டுபோய்வைத்து நெருப்பை மூட்டினேன். அப்போது இவ்வெதிரிவந்து "அக்கா-அத்தான்" எங்கே என்று கேட்டார். நான் "அக்கா இழவு வீட்டுக்குப் போய் விட்டா; அத்தான் சாவகச்சேரிக்குப் போய்விட்டார்" என்றேன் எதிரி சமயலறைக்குள் வந்து வெற்றிலைப்பெட்டியில் இருந்த வெற்றிலை பாக்கை எடுத்துப் போட்டார். நான் எரிக்கிறதற்கு விறகில்லாமையால் வெளியே சென்று விறகெடுக்கவேண்டியிருந்தது. ஆகையால் அப்பத்தைக் குசினிக்குள்ளிருந்த ஓர் பெட்டிக்குள் வைக்கக்கொண்டு போய்ப் பெட்டியைத் திறந்தேன். அப்போது எதிரிவந்து எனது பிற்பக்கத்துக் கழுத்தில் பிடித்துத்தள்ளி விழுத்தி ...................................

நான் சத்தமிட்டேன். எனைச் சத்தம் போடாதபடி அவர் பயமுறுத்தினார். அல்லாமலும் எனது வாயையும் மூடினார். இதற்கிடையில எனது சகோதரிவந்து சத்தம் போட்டதைக் கேட்டேன். எதிரி ஓடிவிட்டான் தாயாரும அவ்விடத்திற்குச் சத்தத்தைக் கேட்டுவந்துவிட்டார்.

நான் தாயாருக்கு நடந்தவற்றைக் கூறினேன். இதற்கிடையில் சின்னத்தம்பியும் அவ்விடம் வந்தார் சின்னத்தம்பி தான் வரும்போது எதிரிஓடினதைக் கண்டதாகக் கூறினார். சின்னத்தம்பி "இனி என்ன செய்கிறது, விதானையாரிடம் இதைப் போய்ச் சொல்லி வழக்கை வையுங்கள்" என்றார். நாங்கள் விதானை வீட்டிற்குச் சென்றோம். எனது வாயால் இரத்தம் வந்தது. கடைவாய் அவிந்திருந்தது. எதிரி அப்புண்ணின் கெரித்தார். எனது சட்டையில் இவ் விரத்தம் தான் பட்டு அடையாளம் கிடந்தது. விதானையார் எங்களை மணியகாரன் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். டக்டர் என்னைச் சோதித்தார். டக்டருக்குநான் நடந்த எல்லாவற்றையும் கூறினேன்.

வழக்கு விசாரணை நடந்துகொண்டிருக்கிறது.

# சிப்பித்தறைச் சிறுமியை வலிந்திழுத்தனராம்

## பரிகாரியார் மகன் பலாத்காரஞ் செய்தாராம்

### ஆடவர்போல உடை

நமது நிருபர்

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சிப்பித்தறை என்னுமிடத்தில் வசிக்கும் ஐயம்பிள்ளை தங்கம்மா என்னும் 17 வயதுச் சிறுமியை வலிந்திழுத்துச்சென்று கற்பழித்ததாக ஒரு வரலாறு கூறப்படுகிறது. இது சம்பந்தமாகப்பொலிஸ்விதானை கூறியதாவது:—

பொன்னர் கதிர்காமுவும் அடுத்த வீட்டில் வசித்தவர்கள் வீட்டிலில்லாமல் இடைக்காட்டுக்குப் போனதாக அறிந்தோம். நானும் பொலிஸ் கான்ஸ்டபிளும் அங்குதேடிச் சென்றோம். திரும்பிவரும் வரும்வழியில் சரவணமுத்து—வேலுப்பிள்ளை என்னும் ஒருவர் தங்கம்மாவைச் செல்லச்சந்நிதியிற் கண்டதாகக் கூறி எங்களுக்குக்காட்டித்தந்தார்.

தங்கம்மா கூறியதாவது:- 13-ந் திகதி சாயந்தரம் 6-30 பணிக்கு கதிர்காமு என்னைக்கண்டு பரிகாரி இராமசாமி மகன் உன்னை விவாகஞ் செய்துகொள்ள விரும்பினார். நீ அவரை வெறுக்காதே என்று சொல்லிக்கேட்டார். நான் மறுத்தேன். சிறிதுநேரஞ்செல்ல இராமசாமிமகன் வந்தார். வந்து தாயாரை விசாரித்தார். நான் தாயார் பாக்கொண்டுபோய்விட்டா என்று சொன்னேன். தங்கைச்சி எங்கே என்றார் இங்கேதான் என்றேன். இங்கேவா ஒரு அலுவல் என்று சொல்லி என்னைப் பிடித்துக் கொண்டு பலவந்தமாக இழுத்துச் சென்றார். நான் போக மறுத்தேன் ஆ. பொன்னுத்துரை என்னை பார்த்து மறுக்காதே விவாகம் செய்து கொள்ளுவார் என்று சொல்லி வயலுக்குக்கொண்டு போய், ஆ. பொன்னுத்துரை 1 பனியனும் வேட்டியும் தந்து கட்டியிருந்த சீலைக்குமேல் கட்டச்சொல்லிய போது நான் அதற்கு மறுத்தேன். அவர் பலவந்தமாகக் கட்டிச் சட்டையைப் போட்டு அரசடி (ஆலடிச் சந்தியில்) நின்ற காரில் ஏற்றிக் கொண்டு போய்த் தட்டாதெருக் கடையில் என்னை உள்ளுக்குவிட்டுக் கடையைப் பூட்டினார். பரிகாரி இராமசாமியின் மகன் கடைக்கு வந்து நீ ஒன்றும் யோசிக்க வேண்டாம். நான் உனை முடிக்கிறேன் என்று பலவந்தமாகத் தேகசம்பந்தம் செய்தார். பின்பு இராமசாமியின் மகன் வந்து, "சண்முகம் கார் கொண்டுவருவார். நான் நல்லூர்ச் சந்நிதியில் நிற்கிறேன்" என்று சொன்னார்

சிறிது நேரத்தால் பொன்னுத்துரை காரில்என்னை ஏற்றிக்கொண்டு சென்று நல்லூரிற் பரிகாரியையும் ஏற்றினார். பின் செல்லச்சந்நிதி மடத்தில் விட்டு விட்டுத் தாங்கள் நாளைக்கு வருவதாகக் கூறிவிட்டுத் திரும்பி விட்டார்கள். 14 ம் திகதி பரிகாரியும் பொன்னுத்துரையும் வந்து சவர்க்காரக் கட்டிகளைத் தந்தார்கள். நான் வாங்க மறுத்தேன். அவர்கள் அங்கே வைத்து விட்டுச் சென்றார்கள். அவர்கள் பிடித்துக் கொண்டு வந்து பொலிசார் வசம் ஒப்புவிக்கப்பட்டார்கள்.

# ஸ்பெயினில் தலைவர்கள் கொலை

## மோட்டாரிலிருந்து குண்டுமாரி

மாட்ரிட், ஜூலை 13—

"நடுக்குறச் செய்யும் பொலீஸ்" படையைச் சேர்ந்தவரும், பாஸிஸ்டு கட்சியைக் கடுமையாக எதிர்ப்பவருமான லெப்டினன்ட் ஜோஸ் டிகாஸ்டில்லோ என்பவர் இன்று தமது வீட்டிலிருந்து வெளியே செல்லுகையில் சுட்டுக் கொல்லப்பட்டார். அருகிலுள்ள ஒரு மோட்டாரிலிருந்த சிலர் அவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகச் சொல்லப்படுகிறது

### கன்ஸர்வெட்டிவ் தலைவர் கொலை

கன்சர்வெட்டிவ் கட்சியைச் சேர்ந்த பிரபல அரசியல்வாதியும், மிதவாதிகள் அதிகாரத்திற்கு வருவாராயின் சர்வாதிகாரியாகக் கூடியவருமான ஸீனர் கால்வோ ஸோடேலோ இன்று ஒரு இடுகாட்டில் கொலையுண்டு கிடந்தார்.

அவர் இன்று காலை கைது செய்யப்பட்ட பிறகு கொல்லப் பட்டாரா அல்லது அவரது வீட்டிலிருந்து அவரைத் தந்திரமாக அழைத்துச் சென்ற அவருடைய அரசியல் விரோதிகள் அவரைக் கொன்றாரா வென்பது திட்டமாகத் தெரியவில்லை.

"நடுக்குறச் செய்யும் பொலிஸ்" படையைச் சேர்ந்த அதிகாரிகளெனச் சொல்லப்படும் சிலரும், இன்னும் பல பொலிஸ் காரர்களும் இரு காவலதிகாரிகளும் ஸீனர் ஸோடேலோவின் வீட்டுக்குச் சென்று அவரைக் கைது செய்ததாகத் தெரிகிறது. ஆனால் பொலிஸ் அதிகாரிகளும் காவல் அதிகாரிகளும் இது பற்றித் தங்களுக்கு ஒன்றும் தெரியாதெனக் கூறுகின்றனர்.

இக்கொலைக்கும் லெப்டினன்ட் ஜோஸ் டி காஸ்டில்லோ சுட்டுக் கொல்லப்பட்டதற்கும் சம்பந்தமிருப்பதாகக் கருதப்படுகிறது.

இதற்கிடையில், ராஜீயநிலை மிகவும் நெருக்கடியானதாக இருந்து வருகிறது. மந்திரிசபைக் கூட்டம் நெடுநேரமாக நடைபெற்றுவருகிறது.

வேலை நிறுத்தம் செய்திருப்பவர்கள் உடனே வேலைக்குத் திரும்ப வேண்டுமென அரசாங்கம் உத்தரவு பிறப்பித்ததாயினும், அவர்களில் எவரும் இன்னும் வேலைக்குத் திரும்பவில்லை.

# காதல் — சங்கீதம்

(6-ம்பக்கத்தொடர்ச்சி)

வந்து விட்டால் அவர் கிரீபிபஸ்ரீ தனமுள்ளபெண் எங்காவது உண்டா என்று வலை வீசுகிறார். அவர் வலை வீசா விட்டால் அவருடைய உறவினராவது வீச்சு வீசித்தான் பார்ப்பார்கள். இனிப் பணமுண்டானால் மூன்று நாளிலுங்கூட விதவைக்கு இரண்டாந்தாரம்............. இப்படியெல்லாம் அவர் சொல்லிக் கொண்டே போனார். இடையிலே இடி முழங்கிறது. 'ஐயோ........ஓ........ஓ நான் இப்போது இரு தொனியில் பேசினேனே........இது உண்மையாய்........ய் ....... விஜயாவும இங்கிருந்தால்.......... ஹிம்ம் ........' என்றார். இரண்டுமுறை மின்னல் பளீர் பளீர் என்று வீசியது. முதல் முறையிலேயே இப்படியெல்லாம் பேசிக் கொண்டு இருந்தவரை — இருந்தவர்களையல்ல — கண்டு விட்டேன். காதல் வாழ்வுக்கு உலகம் பக்குவமில்லை யென்ற அவர் தான் மாத்திரம் காதலை யனுபவிக்கிறார் என்று எண்ணியிருந்தேன். அவருஞ் சோர்ந்துதானே உலகப். பார்த்தீர்களா, பார்த்தீர்களா, நீங்களும் ஏமாந்துவிடாதீர்கள்; மறுமின்னலில், நான் மெதுவாய் இருட்டில் ஏதோ அவ்வழியாய் வந்தவன் மாதிரி விர் விர் என்று போனதை அவருங்கண்டு விட்டார். நான் அவரைக் கேட்டுக்கொண்டு நின்றேனென்று அவர் எண்ணியிருக்க மாட்டார். நீங்கள் நம்பிக்கையீனப்பட்டால் அவரையே போய்க் கேட்க வேண்டும்.

# கான்ஸ்டபிள் - டிரைவர் சண்டை

## கடைக்குள் கான்ஸ்டபிளை விழுத்தி அடித்ததாக வழக்கு.

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் உதவி நீதிபதி திரு. C. P. de சில்வா முகதாவில் R. T. மிஸ்கின் என்னும் பொலிஸ் கான்ஸ்டபிள் என்பவர் தனது கடமையின்பொருட்டு யாழ்ப்பாணம் சின்னக்கடை ரோட்டால் நெல்லுமூட்டைகள் ஏற்றிச்சென்ற X. 2844 இலக்கமிடப்பட்ட லொறி டிறைவர் பொன்னுச்சாமி - செல்லையாவிடம் லைசென்ஸ் கேட்டபோது அவர் கொடுக்காமல் மறுத்தார். இதுசம்பந்தமாக அக்கான்ஸ்டபிளை அடித்தும் தள்ளி விழுத்தியும் தொந்தரவு செய்ததாக அவர்மீது வழக்குத் தொடரப்பட்டது.

R. T. மிஸ்கின் கூறிய சாட்சியமாவது:—

இச் சம்பவத்தன்று ஒருமணியளவில் X. 2844 இலக்கமிடப்பட்ட லொறிபொன்று நெல்லுமூட்டை ஏற்றிக்கொண்டு சின்னக்கடைப் பக்கமாக வந்தது. நான் இந்த லொறி டிறைவரை நிற்கும்படி சைகை செய்தேன். அவர் லொறியை நிறுத்தவில்லை. நான் லொறியில் கால் மிதித்தேறும்படி ஏறினேன். ஏறினதும் லைசென்ஸைத் தரும்படி கேட்டேன், டிறைவர் என்னை 2ம குறுக்குத் தெருவுக்குக் கொண்டு சென்றார். அங்கே தனது லொறியை நிறுபாட்டினார். லைசென்ஸைத் தந்தார். இதன் பிற்பாடு பக்கத்தே இருந்த ஓர் முகமதியன் கடைக்குள் கூட்டிக்கொண்டுபோய் ஓர் வாங்கின்மேல் தள்ளி விழுத்திவிட்டு ஓடினான். ஓடி லொறியிலுள்ளமூடைகளில 9 மூடைகளைத் தூக்கி கீழே போட்டுவிட்டு லொறியுடன் சென்று விட்டான். லொறி நிறைய நெல்லு மூடைகள் அடுக்கப்பட்டிருந்தமையால் மிதமிஞ்சியபாரம் ஏற்றப்பட்டிருக்குமெனச் சந்தேகம கொண்டே நான லொறியைத் தடுத்தேன். அவ்விடத்தில் கிடந்த நெல்லுமூடைகளையும கோட்டில் கொடுத்திருக்கிறேன. அவன் எனக்கு இரு முறை அடித்தான்.

எதிரிக்காக திரு. ஸ்சோறர் வாதித்தார். குறுக்கு விசாரணையின்போது சாக்ஷி கூறியதாவது:—

கி: இது சம்பவம் எத்தனை மணியளவில் நடந்தது?

சா. ஒரு மணியளவில்.

கி: நீர் கார்களைப் பிடிக்கும் தொழிலில் (Duty) ஈடுபட்டிருந்தீரா?

சா: இல்லை, நான் ரோந்துவில் கடமை பார்த்துக்கொண்டிருந்தேன்.

கி: எதிரியை எவ்வளவு காலமாக உமக்குத் தெரியும்?

சா: எனக்கு ஒருக்காலும் தெரியாது.

கி: ஏன் முகமதியனின் கடைக்குச் சென்றீர்?

சா: அவன் என்னைப் பலவந்தமாக இழுத்துச் சென்றான்

கி: முகமதியன் ஓர் சாட்சியா?

சா: ஆம்;

கி: றோட்டில் உன்னை இழுத்துச் செல்லும்போது நீ சத்தமிட்டாயா?

சா: றோட்டில் நான் சத்தமிடவில்லை.

கி: நீ லொறியில் ஏறினாய். அவன் என்னைத் தள்ளினான்.

சா: ஆம்

கி: லொறியில் ஏறினதும் ஓட்டும் கருவியில் (Steering wheel) கையைப்போட்டுச் சேட்டை செய்தாயா?

சா: இல்லை

கி: லொறியை நிறுத்தும்படி சொன்னதல்லாமல் வேறு நீ ஒன்றும் செய்யவில்லை

சா: இல்லை

இதன்பின் P. C. ரும்லென் கூறிய சாட்சியமாவது:-

இச்சம்பவத்தன்று நான் இச்சப் பொலிஸ் கான்ஸ்டபிளையும் இந்த லொறி டிறைவரையும் கண்டேன். கான்ஸ்டபிள் லொறியை மறித்து டிறைவரிடம் லைசென்ஸ் கேட்டார். டிறைவர் லைசென்ஸைக் கொடாமல் லொறியை ஓட்டிச் சென்றார். கான்டபிள் லொறியின் படியில் ஏறினார். லொறி 2-ம் குறுக்குறோட்டுப் பக்கமாக ஓடிற்று. நான் இதைச் சென்று ஐந்து நிமிஷத்தின் பின் அந்த றோட்டால் சென்றேன். அப்பொழுது டிறைவர் கான்ஸ்டபிளை இழுத்துச் செல்வதைக் கண்டேன். கான்ஸ்டபிள் அப்போது, "என்னிடமிருந்து லைசென்ஸைப் பறிக்கப்பார்க்கிறான்" என்று சொன்னார்.

இதன்பின் முகமது இஸ்மேயில் சாட்சியம் கூறினார். அதன்பின வழக்கு வருகிற 21 - 7 - 36க்குத் தவணையிடப்பட்டது.

### வைது அடித்ததாக வழக்கு

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் உதவி நீதிபதி திரு. C. P. de. சில்வா முகதாவில் நவுதரிமுனையில் வசிக்கும் சின்னையாகைம்பெண் சின்னம்மாவின் சகோதரியின் புருஷன் ஆறுமுகம் அப்புத்துரை என்பவர் அடாத்தாக அவளுக்குரிய தேங்காய்களைப் பிடுங்கியதாகவும் அப்போது அவள் தனக்குரிய பங்குத்தேங்காயைக் கேட்டபோது அவளை ஈதியீனமாக வைது கையாலும் பனம் சலாகையாலும் அடித்ததாகவும் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்டவழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சின்னையாகைம்பெண் சின்னம்மா கூறிய சாக்ஷியமாவது:—

சென்ற சித்திரை மீ 29-ம் திகதி 2-30 மணியளவில் இவ்வெதிரி எனது வளவுக்குள் வந்து இன்னொருவனைக்கொண்டு தேங்காய் பிடுங்குவித்தார். இத்தவளவுக்குள்தான் எதிரியும் இருக்கிறார். இவ் வளவு மூன்றுபேருக்குப் பங்காக உள்ளது தேங்காய்களில் நான் எனக்குரிய பங்கைக்கேட்டேன். எதிர் எனக்குப் பங்குரிமையுமில்லை எனச் சொல்லிவிட்டார். நான் அப்பொழுது சிலதேங்காய்களை எடுத்து ஒதுக்கப்போட்டேன். எதிரி தேங்காய்களைப் பறித்து என்னை மிகவும் கெட்டவார்த்தைகளால் வைது கன்னத்தில் அடித்தார். அல்லாமலும் நிலத்திலும் தள்ளிவிழுத்தி ஓர்பனம் சலாகையால் அடித்தார்.

எதிரி தானே தனக்காக வாதித்தார்.

இதன்பின் அப்பையா-கந்தையா வன்னித்தம்பி - அப்புக்குட்டியாகியவர்கள் சாட்சியம் கூறினர். அதன்பின் எதிரி ஆறுமுகம்-அப்புத்துரை கூறியதாவது:—

நான் வழக்காளியின் சகோதரியை விவாகம் செய்தேன்: எனது மனைவியாரின் தாய் எனது மனைவிக்கு நன்கொடையாக இக்காணியைக் கொடுத்தா. இக்காணியில் நானே ஆறு ஏழுமாச காலமாகப் பிரயோசனங்களை எடுத்து வந்தேன். முதலாம சாட்சியும் அவ்வூர் கிராமச்சங்க அங்கத்தவருள் ஒருவருமான இவ்வழக்காளியைத் தூண்டி இப்படி எனக்குமாறாகச் செய்கிறார்கள். இவர்கள் இருவரும் என்மீது வேறு காரியங்கள் சம்பந்தமாகக் கோபமுள்ளவர்கள்.

நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு 5 ரூபா அபராதம் விதித்தார். காசு கட்டுதற்கு இரண்டு வாரத் தவணை கொடுக்கப்பட்டது.

நமது சிறுகதை

# காதல் -- சங்கிதம்.

"கேது"

எங்கோ வெகு தூரத்திலிருந்து இனிய சங்கீதம் காற்றில் கலந்து கொண்டு வந்து காதில் விழுந்தது. ஆனால் அந்த வெளியில் இருள் நிறைந்திருந்தது. ஆக இரண்டொரு நக்ஷத்திரங்கள் தான் மினுங்கி மங்கிய ஒளி தந்தன. கண்ணைப் பறித்துக் கொண்டு மின்னல் ஒளிவீச உடனே "பட பட டப டப் டபார் படார்" என்றெல்லாம் இடி முழங்கிற்று. இவைகளுக்கெல்லாம் இடையில்தான் அந்தச் சங்கீதம் வந்தது. 'மழை பொழியப் போகிறதுபோல் இருக்கிறதே' என்றதற்குப் பதிலாக 'ஹூம்; ஆனால் அதோ கேட்கிறதா? சங்கீதம்! என்ன இனிமை' என்று இருவர் பேசிக்கொண்டே போனார்கள். இருட்டில் யார் யார் என்று கண்டு பிடிக்க முடியவில்லை. அவர்களுடைய குரலிற்றான் இன்னாரென்று கண்டு கொள்ள வேண்டும். எனக்குத் தெரியவில்லை; ஆனால் அவர்கள் பேசியதைத்தான் கவனித்தேன்.

'ஆமாம் கேட்கிறது. இதுவும் எனது வாழ்க்கையைச் சுருக்கமாகச் சொல்லுவது போல் இருக்கிறது; இருளும் மின்னலும் போலவும், இடியும் இசையும் போலவும், இன்பமும் துன்பமும் கலந்திருக்கின்றன'.

'என்ன எல்லாவற்றையும் வைத்துச் சொல்லுகிறீர்கள்; அந்தச் சங்கீதத்தைப் பற்றித்தானே சொன்னேன்'.

'ஏன். இந்தக் கஷ்டங்களுள் எல்லாம் ஒரு சங்கீத இசைதானே சாந்து வைக்கிறது; இனிமை இனிமை; நல்ல இசை வீணையை ஏதோ வித்வான்தான் மீட்டுகிறார் போலிருக்கிறது' என்று மற்றவருக்கு மறைவாகச் சிறிதையும் பின் இசையின் இனிமையையும் எடுத்துக் கூறினார்.

'எந்த ஒரு சங்கீத இசைதான் அந்த வீணையினதா? வேறு?'.

'இந்த வீணையினுடைய இசை' என்று தன்பமே நிறைந்த குரலில் மறுமொழி வந்தது. — ஆனால் இருள் இருள் ஒன்றும் தெரியவில்லை.

'ஹ ஹ ஹ ஹ! அப்படியானால் நீங்கள்தானே இந்த வீணையை மீட்டுகிற வித்வான்; வித்வான் இருக்கிறார். வீணை இருக்கிறது; எங்காவது போயிருந்து பாடலாமே' என்று அந்த இனிய மெல்லிய குரல் விடை தந்தது. யாரென்று தெரிகிறதா வித்வானையும் வீணையையும்? மேலே கேளுங்கள்.

'ஆகா பாடலாம்; ஆனால் வீணையை எடுக்காதபடி எவ்வளவு தடை இருக்கிறது?'

ஆமாம். வீணை இசை தருவதற்கென்றுதானே இருக்கிறது. நல்ல இசை தருவதற்காக அழுக்குப்படியாதபடி பெட்டியில் மூடி வைப்பதுமுண்டுதானே. எல்லாரும் அதைத் திறந்தெடுக்க மாட்டார்கள்; அதற்குரிய வித்வான் எடுத்து இசைப்பார்'.

'பெட்டியில் இருக்கும் வீணையை எடுத்து இசைப்பதெப்படி?'

இவ்வளவு தூரமும் மறைத்துத் தெரிவித்தும் பேசியதென்னவென்பதை நானுமறிந்தேன். நீங்களும் அறிந்து விட்டீர்களல்லவா; அல்லாவிட்டால் மேலும் கேளுங்கள்.

'நிஜவீணைகூட இதையெல்லாம் உணரக்கூடுமானால் தானே எழுந்து வரமாட்டாதா?' என்று பதில் வந்தது. இப்போ தெரிந்ததா? சந்தடி பண்ணாமல் அவர்கள் பேசுவதைக் கேளுங்கள் காதலர்கள். காதலர்கள்.

'அது விபரீதமாகவல்லவோ இருக்கும் ஊரெல்லாம் என்ன பேசுவார்கள்'?

'வித்வான் வீணையைக் கொண்டு போய் விட்டாரென்றுதான'

'இங்கேயே இருந்து கொண்டு சங்கீதத்தை எல்லாரும் கேட்டு ஆனந்திக்கப்பண்ணலாமே'

சங்கீதத்தை எல்லாருமே கேட்கப் பக்குவம் படைத்திருந்தாலல்லவோ?'

இவ்வளவு தூரமும் ஒட்டி நின்று —காதல் விஷயமல்லவா? — நன்றாகக் கேட்டேன்.

(செவிட்டுப் பாம்பாய்ப் பிறந்தாலும் இதை விடுகிறதா?) அப் பேச்சுக்களில் கடைசிப் பகுதியில் சில விளங்கியது போலிருந்தது. ஆனால் 'எல்லாரும் சங்கீதத்தைக் கேட்கப் பக்குவமில்லை' என்றது கொஞ்சமும் புரியவில்லை. வாய்விட்டுக் கேட்கலாமோ என்றும் நினைத்தேன் இந்தச் சமயத்தில் காதலர்களுமொன்றுமே பேசாமல் நிறுத்திக் கொண்டார்கள். நான் உடனே ஏதோ சொல்லிவிட்டேனோ, அது அவர்கள் காதில் விழுந்து விட்டதோ? என்று பயந்து விட்டேன்.

பின்பு 'ஆகா நான் எண்ணுவதும் அதுதான். உலகமே காதலை அநுபவிக்கப் பக்குவமற்றிருக்கிறது, என்பதையும் நான் அறிவேன்'.

உடனே நான் ஓகோ, அதுதான் காதல் — சங்கீதம் என்று சொல்லக்கூடிய தொடர்பதமோ தொடர்பொருளோதான் என்று முடிவுகட்டி இந்த விஷயத்திற்கு அப்படியே முடிவும் கட்டி விட்டேன்.

கேதுவைப்பற்றி என்ன எண்ணுகிறீர்கள்? ஓகோ கதை எழுதுவதற்காக எல்லோரையும் தூரத்திக்கொண்டு திரிகிறானென்றுதானே. புலவர் ஆசாமிகளையும், குடியர்களையும், காதலர்களையும் விட்டுத் தூரத்துவதுதான் என் வேலையென்று நினைக்கிறீர்களோ. சரி சரி எதைச் சொன்னாலுஞ் சொல்லுங்கள். 'உலகமே காதலை அநுபவிக்க முடியாத சுத்த அசடு' என்று அந்தக் காதலர் சொன்ன மாதிரி எனக்கு நீங்களெல்லாம் சுத்த அசடுகள் உங்களில் யாரையாவது இடையில் வந்து தூரத்தவெண்ணுகிறேன். ஒரு சுருட்டு அல்லது ஒரு நெருப்புப் பெட்டி தேவைப்பட்டு உங்களிடம் வந்து யாராவது கேட்டால் அது நான்தான் என்று எண்ணி விடுங்கள் பிறகு வேறு யாராவது அப்படி உங்களைக் கேட்டு விட்டால், உங்களையெல்லாம் 'சுத்த அசடு' என்று சொன்ன கேதுதான் அவர் என்று சண்டை போட்டாலும் போட்டுக்கொள்ளுங்கள். — அது போகட்டும். கதை முடிந்து விட்டதென்று இருக்கிறீர்கள். சே! இனிமேல்தானே ருசிகரமான பகுதி இருக்கிறது.

காதலர் (போலும் :- (காதலிக்குப் போலும்) 'ஐயையோ! உலகமே உண்மைக் காதலற்றதாய்ப் போய்விட்டது. க் — கா — தூ — அ — தல்! சே, பொருள்மேலும் பூமிமேலும்தான். விரும்பத்தக்க குணமொன்றுமில்லாத பெண்ணானாலும் பணமும் காணிபூமியுமிருந்தால் கல்யாணம் சீக்கிரத்தில் ஆகிவிடுகிறது. பிறகு பணத்தையுங்காணியையும் வைத்துக்கொண்டு அவர்கள் கட்டி அழுகிற அழுகை எத்தனையோ. காணி பூமியில்லை, நற்பழக்கமுண்டு. மிடியிலும் துக்கமின்றி இல்லறம் நடத்தி, பெருவாழ்விலும் பெருமிதமின்றி இல்லறம் நடத்த வல்ல குணம் உண்டு; காதல் வாழ்வைக் கடைசி வரையில் உண்மையாக வைக்கக்கூடிய சக்தியுண்டு; அப்படிப்பட்ட பெண் இருந்தாலும், கல்யாணம் ஆகுமா? காசுங் காணி பூமியுமில்லையே! மேலும் உத்தியோகமுண்டானால்தான் ஆடவனுக்குக் கல்யாணம். அப்படியில்லாவிட்டால் அவர் (கைக்குடிகப் பிரமச்சாரியுமல்ல, வைதிகப்பிரமச்சாரியுமல்ல) கட்டாயப் பிரமச்சாரி. ஏன், அவர் தமக்கேற்றதாய், உணவுக்கு உடைக்கு வழிபண்ணக்கூடிய கமத்தொழிலாவது செய்து காதல் வாழ்வு வாழ முடியாதா? அதை யார் எண்ணுவார்கள்? 'சீ, தோட்டக்காரன், அவனுக்குமொரு பெண்'? என்று தள்ளி வைப்பார்கள். நடக்கிற கல்யாணமெல்லாம் காசுக்கும் காணிக்குமாகத்தான். சில இடத்தில் கூடிய தொகை, சில இடத்தில் குறைந்த தொகை; இவ்வளவுதான் வித்தியாசம். நல்ல தன்மைக்கு ஒரு ஆடவர்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்.)

## பரீக்ஷை வினாக்கள் இயற்றும் முறை

### விடைகளை மதிக்கும்போது அவதானிக்க வேண்டியவை

(வடபகுதிப் பிரதம வித்தியாதரிசி திரு. K. S அருணந்தி எழுதுவது)

1. பாடத்திட்டத்தின்படி மாணவன் அறியவேண்டிய விசேஷமான விஷயங்களை வினாப் பத்திரத்திலே இயன்றவரை அடக்கிக்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு செய்யுமிடத்து வினாக்களின் தொகை அதிகரித்தல் இயல்பு. வினாப்பத்திரத்துக்குக் குறித்தவோர் அளவுக்கு மேல் நேரங்கொடுப்பது விரும்பப்படத்தக்கதன்று என்பதற்குப் பல நியாயங்களுள. ஆதலின் வினாக்களின் தொகையை அளவு கடக்க விடுதல் நன்றன்று.

2. ஒரு வினாவிலே பல விதிகளை அடக்குதல் நன்றன்று. ஏனெனில், ஒரு விதியை மாத்திரமறியாத மாணவன் அவ்வினாவுக்கு விடையளிக்காது விடுவனேல், அவனுக்கு ஏனைய விதிகளுந் தெரியாதென்னுந் தப்பபிப்பிராயத்துக்கு இடமாகின்றது. ஆனால் சில சாதாரணமான்றேல் மூல விதிகளை மாணவன் கட்டாயம் அறிந்திருக்க வேண்டுமாதலின், அவைகளை எவ்வினாவிலுஞ் சேர்த்துக் கொள்ளலாம்.

3. விடைகள் அபிப்பிராய பேதங்களுக்கு இடங் கொடுப்பனவாக இருத்தலாகா. ஆதலின், வினாப் பத்திரத்தில் ஆட்சேபனைக்கிடமற்ற குறுகிய விடைகளையுடைய வினாக்களையுஞ் சேர்த்தல் வேண்டும். இப்படிச் செய்யுமிடத்துப் பல கேள்விகளை யமைக்கவும், அவ்வழியே பாடத்திட்டம் முழுவதையுமடக்கிக் கொள்ளவும் இலகுவாயிருக்கும்

4. தொடக்கத்திலே கடினமான வினாக்களைக் கொடுத்தலாகாது. கொடுப்பின் மாணவனுக்குத் தொடக்கத்திலேயே மலைப்பை யுண்டாக்கிவிடும்.

5. சாதாரண விவேகமுந் தேர்ச்சியுமுள்ள மாணவன் குறித்த நேரத்தின் சித்தியடைவதற்குத் தக்க விடையளிக்கும் இயல்புடைத்தாயிருத்தல் வேண்டும்.

6 ஒரு ஆற்றலை அளக்கும் பரீக்ஷை பிறிதோர் ஆற்றலையும் அடக்கியதாயிருத்தல் பிழையாகும் உதாரணமாகக் கணிதப் பரீட்சையிற் பாஷை இலகுவாயிருத்தல்வேண்டும்.

7. வினாக்கள் நன்றாகவியற்றப்பட்டால் மிகச் சிறந்த மாணவன் குறித்த நேரத்தில் விடைகளை முடித்து 100 புள்ளிகள் பெறவும், மிகக் குறைந்த மாணவன் ஒன்றுந் தெரியாது வட்டம்பெறவும் நிகழாது. பல மாணவர் 100 புள்ளிகளைப் பெறுவரேல் அப்பரீட்சை அவரது அறிவைப் பூர்த்தியாய் அளக்கவில்லையென்பது கருத்து. அங்ஙனமே பலர் வட்டம் பெறுங்கால் பரீட்சையானது அவர் மாட்டுள்ள சிற்றறிவை அளக்கு மியல்பு வாய்க்காதென்று கருதப்படும்.

8. வினாக்களின் தன்மைகளுக்கேற்றவாறு ஒவ்வொன்றுக்கும் புள்ளிகளைப் பங்கிடு செய்யும் போது மிக்கவாலோசனையோடும் கவனத்தோடுஞ் செய்தல் வேண்டும். மாணாக்கரையும் பாடத்தையுஞ் செவ்வனே யறியாத பரீட்சகர் இலகுவான வினாவுக்குக் கூடிய புள்ளிகளையும், கஷ்டமான வினாவுக்குக் குறைந்த புள்ளிகளையும் கொடுக்க நேரிடும். அதனால் நன்மையான அளவுகோலாகவிருக்கவேண்டிய பரீக்ஷை இடையிடையே அளவுபடிகள் கூடியுங் குறைந்துமுள்ள விபரீத அளவைக்கோலை யொத்ததாகும்.

9. ஆற்றுக்கு இத்தனை விதம் புள்ளிகளெடுத்தாற் சித்தியென்று தீர்மானித்தல் இலகுவான காரியமன்று. உதாரணமாக ஒரே ஆசிரியனைக் கொண்டு ஒரு வகுப்புக்கு ஒரே பாடத்தில் இரு பரீட்சைகளை இயற்றுவித்து அல்லது நடத்துவித்துப் பார்த்தால் முதலாம் பரீட்சையில் 33 விதம் பெற்ற மாணவன் இரண்டாவதிலும் 33 விதம் பெறுவானென்பது சாத்தியமா? இல்லவேயில்லை. ஆகலின் விடைப்பத்திரங்கள் யாவையும் பார்த்த பின்னர் வகுப்பினாசிரியனுடனும் ஏனைய வாசிரியருடனும் ஆலோசித்தே சித்தி பெறுதற்குரிய விதத்தைத் தீர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

10. விடைகளை மதித்துப் புள்ளிகள் கொடுக்கும்போது பகுதி பகுதியாக நன்கு நிறுத்து எல்லா விடைகளையும் ஒரேயளவு கொண்டு அளத்தல் வேண்டும். உதாரணமாகக் கணிதத்தில் விடை பிழையாயும் வழி சரியாயுமிருக்கக் கண்டால் ½ அல்லது மூன்றில் இரண்டு பங்கு புள்ளிகள் கொடுத்தல்வேண்டுமென்றுமாறு விதியொன்றை விதித்துக் கொள்ளுதல் வேண்டும். வியாசமாயின் இன்னின்ன அங்கங்களின் மேற்புள்ளிகளைக் கொடுத்தல்வேண்டுமென முன்னரே யோசித்து வைத்துக்கொள்ளுதல் வேண்டும்; சரித்திரம் முதலாய பாடங்களாயின் இன்ன வினாவிற்கு இன்னின்ன விஷயங்கள் விடையில் அடங்கவேண்டுமெனக் கணித்து, எல்லாமிருப்பின் முழுப் புள்ளிகளையும், சிலமாத்திரமிருந்தால் அவைக்குரிய பாகப் புள்ளிகளையும் பகுத்துக் கொடுக்கலாம்.

## இலங்கையில் இந்திய விமானிகள்

### சென்னையிலிருந்து ரத்மலானைக்கு வந்தனர்

கொழும்பு ஜூலை 13

சென்னை விமானச் சங்கத்தைச் சேர்ந்த திரு. எம். டி. சுந்தரராசன் சனிக்கிழமை பகல் கிப்ஸி மத் விமானத்தை சென்னையிலிருந்து ஓட்டிக்கொண்டு ரத்மலானை வந்து சேர்ந்தார். அதே விமானத்தின் மற்றொரு விமானமோட்டியாகிய திரு. டபிள்யூ பார்த்தசாரதி என்பவரும் இங்கு வந்துசேர்ந்தார். அவர்கள் சனிக்கிழமை காலை 6-30 மணிக்குச் சென்னையைவிட்டுப் புறப்பட்டார்கள். முதலில் வரும் வழியில் அவர்கள் திருச்சியில் இறங்கினார்கள். அங்கு 45 நிமிடநேரம் தங்கிய பின்னர் அவர்கள் கொழும்பை நோக்கிப் புறப்பட்டார்கள். இந்தியாவில் உள்ள விமானமோட்டிகளில் மிகச் சிறியவர் திரு. பார்த்தசாரதியாவர். அவர்கள் கொழும்புக்குப் பிற்பகல் 2 மணிக்கு வந்துசேர்ந்தார்கள். மேற்படி விமானத்தை ஓட்டிவந்த திரு சுந்தரராசன் கூறியதாவது:—

சென்னையிலிருந்து கொழும்பு வரை காலநிலை சாதகமாகவே இருந்தது. விமானமும் நன்கு இயங்கியது ஆனால் ரத்மலானை விமான நிலையத்தைக் கண்டுபிடிப்பதுதான் சிறித சிரமமாக இருந்தது. ஏனெனில், கொழும்புக்கருகே சற்று மந்தாரமாக வானம் மூடிக்கொண்டிருந்ததேயாகும். நான் எப்போதும் 1000அடி உயரத்தில்தான் பறப்பது வழக்கம். இங்கு தென்னைகள் அநேகமாக வளர்ந்திருந்தமையால் 400 அடி உயரத்தில் தாழப் பறந்தேன். இலங்கைக்கும் நானும் திரு பார்த்தசாரதியும் இம்போதுதான் முதல் தடவையாக வந்திருக்கிறோம்.

நேற்றுக் காலை 10-மணிக்கு அவர்கள் இங்கிருந்து புறப்பட்டார்கள். ரத்மலானைக்கு இவ் விமானம் வந்து சேர்ந்ததும் போலிஸ் இலாக்காகங்க இலாக்கா அதிகாரிகள் சென்று பார்வையிட்டனர்.

## மனைவியை அடித்துக் கொன்றானா?

### வெள்ளையன் என்னும் நளவன்மீது வழக்கு

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் கோப்பாய் தெற்கில் வசிக்கும் நளவ வகுப்பைச் சேர்ந்த முருகன் வெள்ளையன் என்பவன் தனது மனைவியாகிய சின்னன் என்பவளை அடித்துக் கிணற்றில் போட்டுக் கொலை செய்ய எத்தனித்ததாக அவ்வூர் மணியகாரனது அறிக்கைப்படி இன்று வழக்குத் தொடரப்பட்டது. நீதிபதி இதை விசாரணை செய்யும்படி பொலிசாருக்கு அறிவித்து — வழக்கை 24-7-36 க்குத் தவணையிட்டார்.

சென்ற மாதம் 29ம் திகதி பிற்பகல் வெள்ளையன் தனது மனைவி சின்னன் என்பவளை அடித்தானும். அவள் அடியின்பின் அதிகம் பேச முடியாமல் இருந்தாளாம். அன்று இரவு நடு இரவின்பின் தன்னைக் கால்மையில் தூரத்துக்கப்பாலிருக்கும் இளையதம்பியினுடைய தோட்டக் கிணற்றில் கொண்டுபோய்ப் போட்டதாயும் ஏதோ அனுங்கின சத்தம் கேட்டுத் தலையன் முதலியவர்கள் அவ்விடத்திற்குச் சென்று அவளை வெளியே எடுத்தனராம். அப்பொழுது அவள் அறிவில்லாமற் கிடந்தாளாம். இச்சம்பவம் விதானையாருக்கு அறிவிக்கப்பட்டதாம்

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டமாகச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்ற அடைவு பிடிக்கும் வல்வெட்டித்துறை வே. வ. சிவப்பிரகாசம் என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1935ம் ஆண்டு மாசிமீ

| நம். | ரூ. | சு. | பெயர் | ஊர் | நகைகளின் விபரம் |
|---|---|---|---|---|---|
| 1442 | 17 | 12 | கனகசுந்தரம் ராமச்சந்திரர் | வல்வெட்டித்துறை | கற்சேருடு சோடி 1 |
| 1457 | 23 | 12 | கனகசுந்தரம் சிவகாமிக் கண்டு | வல்வெட்டித்துறை | கற்சேருடு சோடி 1 |
| 1461 | 25 | 10 | சின்னப்பா தங்கரத்தினம் | ,, | சிவப்புக்கல் அழுக்கத்தோடு சோடி 1 |
| சித்திரை மாசம் | | | | | |
| 1524 | 2 | 12 | மாணிக்கம் சின்னாச்சி | வரிக்காடு | கற்சேருடு சோடி 1 |
| 1525 | 3 | 9 | சின்னையா வநயல | வல்வெட்டித்துறை | கற்சேருடு சோடி 1 |
| வைகாசி மாசம் | | | | | |
| 1610 | 2 | 10 | மாணிக்கம் தங்கம் | ,, | கற்சேருடு சோடி 1 |
| 1624 | 10 | 6 | கனகசுந்தரம் சிவகாமிக்கண்டு | ,, | சிருகு பூ 1 |
| 1650 | 22 | 12 | பொன்னுச்சாமி சோதிமுத்து | ,, | கற்சேருடு சோடி 1 |
| 1652 | 22 | 10 | கந்தசாமி அன்னக்கண்டு | ,, | கற்கூர் 1 |
| 1658 | 25 | 12 | சபாபதிப்பிள்ளை சின்னம்மா | ,, | கற்சேருடு சோடி 1 |
| ஆனி மாசம் | | | | | |
| 1685 | 5 | 10 | செல்லத்துரை தங்கம் | ,, | கற்சேருடு சோடி 1 |
| 1715 | 17 | 13 | தியாகராசா பொன்னுக்கண்டு | ,, | கலாவளை மோதிரம் 1 |
| 1719 | 17 | 20 | முருகுபிள்ளை நீலகண்டு | ,, | வெள்ளைக் கற்சேருடு சோ. 1 |

விற்பனவு தாதுவருஷம் ஆடிமாசம் 17ம் திகதிக்குச் சரியான (1-8-36) சனிக்கிழமை காலை 10 மணிதொடக்கம் எடுக்கப்பட்டாகை பிரசித்தமாக மிருதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வ. மு. கந்தசாமி,
லேர்நிங் மேன்தர்,
வல்வெட்டித்துறை.

(Mis. 81. 16 & 20 7-36.)

## கதிர்காமத்திற்கு ரோட்டு

திஸமஹாராமி மிருந்து கதிர்காமத்திற்கு ரோட்டுப்போட 250,000 ரூபாய் செலவாகுமென்று 1927-ம் வருஷம் மராமத்திலாகா டைரெக்டர் கூறினார். 1934-ம் வருஷம் ரோட்டை டிஸ்திறிக்ரோட் டுக் கமிட்டி கவனிக்கவேண்டுமென்று ஓர் பிரேரணை அரசாங்க சபையில் பிரேரிக்கப்பட்டது. அதற்கு அவசரமில்லை யென்று கூறப்பட்டுப் பிரேரணை 1935 ஜூன் மாதம் நிராகரிக்கப்பட்டது.

பின் 1935-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் கதிர்காமம் மடாதிபதிகள் சிலர் மாணிக்க கங்கைமீது ஓர் பாலம் கட்டப்பட வேண்டுமென்று மனுச்செய்தனர். பாலத்தினுல் யாத்திரிகர்கள் பலனடைவார்களென்றாலும், பாலம் கட்ட ஏற்படும் செலவைக் கதிர்காம ஆலயத்தார்தான் வகிக்க வேண்டுமென்று மராமத்திலாகா டைரக்டர் கூறினர்.

கதிர்காமம் யாத்திரிகர் தொண்டர் சங்க லிமிட்டெட் இப்பொழுது கார்த்தைகள் செல்ல ரோட்டு நன்று போடப்பட வேண்டுமென்று மனுச் செய்து கொண்டிருக்கின்றனர். மராமத்திலாகா முன் கூறியதையே சொல்லியிருக்கிறதென்றும் இதைக் குறித்து அபிப்பிராயம் கூறும்படி போக்குவரத்து நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர் என்றும் தெரிகிறது.

## இலங்கை நீதிபதிக்குப் பெரிய உத்தியோகம்

### திரு ஜஸ்டிஸ் டால்டன் தங்கனியகாவுக்கு மாற்றம்

தற்காலிகப் பிரதம நீதிபதியாக வேலைபார்த்த திரு. ஜஸ்டிஸ் எல்லி டால்டன், தங்கனியகாவின் பிரதம நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் ஆகஸ்டு மாதம் 11ம் தேதி தங்கனியகாவுக்குப் புறப்பட்டுப் போவார். இலங்கையின் புதிய பிரதம நீதிபதி ஸர் ஸிட்னி ஏப்ரஹாம்ஸ் வகித்துவந்த ஸ்தானத்திற்கே திரு ஜஸ்டிஸ் டால்டன் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஜஸ்டிஸ் டால்டன் தற்சமயம் 1750 பவுன் வருஷ சம்பளம் வாங்குகிறார். தங்கனியகாவின் பிரதம நீதிபதியின் சம்பளம் 2000 பவுன்.

திரு. ஜஸ்டிஸ் டால்டன் 1925ம் வருஷம் ஏப்ரல் மாதம் இலங்கையில் சுப்றீம் கோர்ட்டு நீதிபதியாக நியமிக்கப்பட்டார். குடியேற்ற நாட்டுச் சேவையில் அவர் 1901ம் வருஷம் ஈடுபட்டார். இலங்கைக்கு வருமுன் கோல்ட் கோஸ்டில் அவர் சுப்பிரீம் கோட்டு நீதிபதியாக வேலை பார்த்துக்கொண்டிருந்தார். 1933ம் வருஷம் ஜூன் 1ம் தேதி முதல் நவம்பர் 10ம்தேதி வரை அவர் பிரதம நீதிபதியாக வேலை பார்த்தார். சென்ற ஏப்ரல் மாதம் அவருக்கு வயது 57. பிரிட்டிஷ் கடாஜ சட்டம் பற்றிச் சில புத்தகங்களை அவர் எழுதியிருக்கிறார்.

## கற்பழித்ததாக வழக்கு

### காட்டுராசா என்பவருக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு, 10உ

சிங்களவாடியைச் சேர்ந்த இராமசாமி பூபாலபிள்ளை என்ற காட்டுராசா என்பவர்மீது, கடந்த 3ம் தேதி மண்டூரைச் சேர்ந்த அருணாசலம் இலட்சமி என்னும் ஓர் மாதைக் கற்பழித்ததாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மீண்டும் மட்டக்களப்புப் பொலிஸ் நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மட்டக்களப்பு வைத்திய அதிகாரி டாக்டர் சபாபதி மனுதாரின் காயங்களைப் பற்றிக் கூறினார்.

நீதிபதி எதிரியைப் 17ம் தேதி வரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தார்.

## திருவள்ளுவரும் திருக்குறளும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### திருவள்ளுவர் வரலாற்றுச் செய்திகள்

இத்தகைய சிறந்த நூலை இயற்றிய திருவள்ளுவரது வரலாறு ஒரு வரையறையாக வழங்கப்படவில்லை. அவருடைய பிறப்பைப் பற்றியும், சாதியைப்பற்றியும், சமயத்தைப்பற்றியும், தொழிலைப்பற்றியும், ஆச்சிரமத்தைப் பற்றியும், ஒன்றுக் கொன்று வேறுபாடான செய்திகள் தமிழ்நாட்டில் வழங்குகின்றன. அவற்றை ஆராய்ந்து அறுதியிடுதற்குரிய கருவிகள் போதியனவாகக் கிடைக்கவில்லை. இக் குறை திருவள்ளுவர் திறத்தில் மட்டுமே அமைந்ததன்று. பெரும்பாலான தமிழ்ப் புலவர்களுடைய வரலாறுகள் இத்தகையனவே.

### திருவென்னும் அடை

பலவகையான கொள்கையினரும் திருவள்ளுவரைத் தங்கள் தங்களைச் சார்ந்தவராகக் கூறுவதும் தங்கள் கூற்றுக்கு ஆதாரங்களை எடுத்துக் காட்டுவதுமாகிய இவை இப் புலவர்பிரான் எல்லோராலும் விரும்பப்படும் சிறப்பின ரென்பதைத் தெரிவிக்கின்றன. சங்க காலத்துப் புலவர்களையும் நூல்களையும் முற்காலத்தினரும் வழங்கும் போது திருவென்னும் அடை கொடுத்து வழங்கியதாகக் காணோம். ஆயினும் வள்ளுவரையும், குறளையும் திருவள்ளுவரென்றும், திருக்குறளென்றும் கூறுகின்றோம். திருவென்பதற்குத் திருக்கோவையின் உரையில் பேராசிரியர் கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கமென்று உரை கூறுகின்றார். வள்ளுவரும் இவர் வாய்மொழியும் யாவரானும் ஒருங்கே விரும்பப்படுவதனால் திரு வென்னும் அடைமிகப் பொருத்தமுடையதே. இவருக்கு அமைந்த பல பெயர்கள் இவருடைய சிறந்த இயல்புகளை வெளிப்படுத்துகின்றன.

### திருக்குறளின் தனிச்சிறப்புகள்

திருவள்ளுவரைப் பற்றிய வரலாறுகள் ஒருபால் இருப்ப, நமக்கு இப்பொழுது பயன்படுவது திருக்குறளாகிய திருவள்ளுவரேயாம். தமிழில் கருத்தா வாகுபெயருக்கு உதாரணமாகத் திருவள்ளுவரென்பதையன்றி நூல் வழக்கில் வேறு ஆட்சி இப்பொழுது கிடைக்கவில்லை. அகத்தியம் தொல்காப்பிய மென்பன ஈறுதிரிந்த பெயர்களாகவுள்ளன. ஆசிரியர் பெயரை உள்ளவாறே கூறி நூலை உணர்த்தும் இயல்பு அவற்றிற்குஇல்லை. எனவே திருக்குறளைப் பற்றிப் பேசினாலும் ஆகுபெயர்ப் பொருளால் திருவள்ளுவரைப் பற்றிப் பேசியதாகவே அமையும்.

ஏனைய தமிழ் நூல்களிற் காணப்படாத சில சிறப்பியல்புகள் திருக்குறளுக்கு உண்டு. நூற்பயனாகிய அறம் பொருள் இன்பம் வீடு என்பவற்றைத் தெளிவாகக் கூறிய நூல்களுள் குறளுக்கு ஈடானது வேறு இல்லை. சங்கமருவிய பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண் கீழ்க்கணக்கு என்பவற்றுள் திருக்குறளைப்போல 1330 செய்யுட்களையுடைய நூல் வேறொன்றும் இல்லை. குறட்பாவில் அமைந்ததும் இல்லை.

திருக்குறட் தமிழ்ச் செய்யுட்களில் முதற் பாவாகிய வெண்பாவில் முதல்வகையாகிய குறட் பாக்களாலாகிய சிறப்புடையது இச் சிறப்பே இந் நூலுக்கும் பெயரைத் தந்தது. சங்க காலத்து நூல்களில் காலடியாரும் ஆசிரியமாலையும் கலித்தொகையும் பரிபாடலும் பட்டினப்பாலையாகிய வஞ்சிநெடும் பாட்டும் யாப்பாற் பெயர்பெற்றன. ஆயினும் காலடியாரை யன்றி எத்தனையோ காலடிப்பாட்டுக்களுள்ள நூல்களும் ஆசிரியமாலையையன்றி வேறு பல ஆசிரியப்பா நூல்களும் கலித்தொகையை யன்றிக் கலிப்பா அமைந்த நூல்களும் முற்காலத்து இருந்தன. முதற் சங்கத்து எத்தனையோ பரிபாடல் நூல்களும், பல வஞ்சிப் பாட்டுக்களும் உண்டென்று அறிகிறோம். ஆனால் குறட்பாக்களால் வேறு ஒரு பெரிய இலக்கிய நூல் முன்பு இருந்ததாகத் தெரியவில்லை. இலக்கண நூல்கள் மட்டும் சில இருக்கின்றனவென்று யாப்பருங்கல விருத்தியால் தெரிகின்றது.

திருக்குறளைப் பாராட்டும் திருவள்ளுவமாலை யென்ற ஒரு நூல் இருக்கின்றது. அதிலுள்ள செய்யுட்களைப் பல புலவர்கள் பாடியுள்ளார்கள் அந் நூலைப்பாடியவர்கள் யாராயினும் அது பல நூற்றாண்டுகட்கு முன்பே உண்டாயிற்றென்பதற்கு நேமிநாதம் முதலிய நூல்களிற் போதிய ஆதாரம் இருக்கின்றது. இங்ஙனம் ஒரு நூலைச் சிறப்பித்துப் பாடிய தனி நூலொன்று வேறு எந்த நூலுக்கும் முற்காலத்து அமையவில்லை.

### உரைகள்

திருக்குறளுக்கு உரை வகுத்தவர் பதின்மரென்று ஒரு தனிப் பாடல் கூறுகின்றது. இங்ஙனம் பதின்மர் உரையெழுதிய நூலும் வேறொன்று இல்லை. அந்தப் பதின்மருடைய உரைகளும் இப்பொழுது கிடைக்கவில்லை. இப்பொழுது கிடைக்கும் உரைகளுள் பரிமேலழகர் உரையே மிகச் சிறந்தது. மணக்குடவர் உரையும் இப்பொழுது வழங்குகின்றது. பரிப்பெருமாளென்பவரது உரையொன்று சிலர்பால் உண்டென்று தெரிகின்றது. இப் பதின்மர் உரைகளை யன்றி வேறு சில பழைய உரைகளும் இந்நூலுக்கு உண்டு.

இந்நூலுக்கு நேரே உரை இயற்றினார் இங்ஙனம் பலராக வேறு பல உரையாசிரியர்கள் தாங்கள் எழுதிய பிற நூலுரைகளிலே வாய்ப்பு நேர்ந்த இடங்களில் திருக்குறட்பாக்கள் சிலவற்றிற்கு உரையிட்டுச் செல்கின்றனர். பேராசிரியர், நச்சினார்க்கினியர், சிலப்பதிகார அரும்பதவுரை யாசிரியர், அடியார்க்கு நல்லார் முதலியவர்களுடைய உரைகளில் சில குறள்களுக்கு உரைகளைக் காணலாம். அவர்கள் கூறும் உரைகளிற் பரிமேலழகரோடு மாறுபட்ட பகுதிகளும் உண்டு. ஒரு நூலின் ஆசிரியர் காலத்திலேயே அதற்கு உரை அமைந்திருப்பின் இத்தகைய மாறுபாடுகள் உண்டாகக் காரணமில்லை. பிற்காலத்தில் வந்த உரையாசிரியர்கள், நூலாசிரியருடைய கொள்கையை முற்றும் உணர்தல் இயலாது. ஆதலின் அவர்களுடைய உரைகளிற் சில மாறுபாடுகள் இருத்தல்கூடும். அவர்கள் செய்த பணைத்துணை நன்றியினால் தினைத்துணையாகிய அம் மாறுபாடுகளை நாம் மறந்துவிடுகின்றோம்.

சங்கரநமச்சிவாயர் நன்னூலுரையில் இசையெச்சம் என்னும் இலக்கணத்திற்கு உதாரணமாக "இணரெரி தோய்வன்ன" என்னும் திருக்குறளை எடுத்துக்காட்டி மிக அழகாக விரிவுரை எழுதியிருக்கின்றார்.

தொடரும்

## கோழிக்கறி தின்னும்படி நிர்ப்பந்தம்

### சதிபதி சச்சரவில் மனைவிக்குக் காயம்

அத்துக்குடி ஜூலை 5உ

இவ்வூர் சங்கரம் புரத்தில் காந்திமதியம்மாள் என்ற ஸ்திரியை அவர் கணவன் கோழிக்கறி அருந்தும்படி சொன்னதாகவும், மனைவி சமைக்கத் தெரியாதென்றும் தாம் கறி புசிப்பதில்லையென்றும் கூறியதாகவும் இதன்பேரில் கணவன் வேறிடத்தில் கோழிக்கறி சமைத்து மனைவியைப் புசிக்கும்படி நிர்ப்பந்தித்ததிலிருந்து சதிபதிகளுக்குள் சச்சரவு ஏற்பட்டதாகவும் கணவன் அந்த ஸ்திரீயைக் கொடுமையாகக் காயப்படுத்தியதாகவும் கணவன் அந்த ஸ்திரீயைக் கொடுமையாகக் காயப்படுத்தியதாகவும் ஸ்திரீ கூச்சலிட்டுத் திமிறித் தம் தாயிடம் சென்றதாகவும் தாயார் இப்பொழுது பொலிஸில் இதுபற்றி முறைப்பாடு செய்திருப்பதாகவும் தெரிகிறது. பொலிஸ் விசாரணை நடந்துவருகிறது.

## விலைக் காணி

400 பரப்புத் திறமான பழைய கமம் குஞ்சுப் பரந்தன் கவண் மேன்றப் பாடசாலைக்குச் சமீபத்திலுள்ளதும் தற்போது கப்பி வேலியும் நீர்ப்பாய்ச்சலும் உடையது. விலை பரப்பு ரூபா 10 ஆகக் கையிழிக்கப்படும்.

RAJIAH,
Kalvalai, Manipay.
Mis. 80. 16—27-7-36.

## பாலஸ்தீனத்தில் இன்னும் கலகம்.

### பல அராபியர் கைது

லண்டன், 5உ

கலகக்காரர்களின் வெடிகுண்டுப் பிரயோகமும் துப்பாக்கிப் பிரயோகமும் இன்னும் ஓயவில்லை. வெடிகுண்டு எறியப்பட்ட காரணமாக ஜெருஸலம் மாராமத்து இலாகாவில் வேலை செய்துவந்த மூன்று யூதர்களுக்குப் பலமாகக் காயம் ஏற்பட்டிருக்கிறது. ஜாபா, ஹைபா, காப்லன் இம்மூன்று இடங்களிலும் வெடிகுண்டுகள் எறியப்பட்டன. ஆனால் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை.

ஓர் பாலத்தை வெடிகுண்டால் தகர்க்க முயற்சி செய்யப்பட்டது. ஆனால் முயற்சி பிரயோசனப்படவில்லை. இது சம்பந்தமாகப் பல அராபியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்று காலையில் சில கலககாரர்கள் ராணுவ வீரர்கள்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தார்கள். ராணுவ வீரர்களும் உடன் துப்பாக்கியை உபயோகித்தார்கள். இதனால் ஒரு அராபி கொல்லப்பட்டான். மூன்று அராபியர்களுக்குப் பலத்த காயம் ஏற்பட்டது.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டிலைச்சட்டத்தின்படி லைசென்ஸ்பெற்ற அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வி. வீ. & சன்ஸ் கடையில் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:-

| இல | வ. | ரூ | வட்டி | பெயர் | ஊர் | நகைகளின் விபரம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1933ம் ஆண்டு மார்ச் மாதம் | | |
| C 4027 | 21 | 10 | 1 | மாப்பாணர் குமாரலிங்கம் | இல்லாலை | பொன் தாலி 1 |
| 4051 | 23 | 12 | ,, | கணபதியார் நாகலிங்கம் | நல்லூர் (நாகோவிலடி) | மோதிரம் 1 |
| | | | | 1934 ஆண்டு சித்திரை மாதம் | | |
| 5505 | 8 | 60 | ,, | சின்னத்தம்பி பெண் தங்கம் | கரையூர் | அச்சக்காப்புசோடி 1 |
| 5760 | 30 | 8 | ,, | கணபதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை | வியாதெரு | பிழக்கு அச்சரக்கூடு 1 |
| | | | | ஆடி | | |
| 6898 | 28 | 15 | ,, | S. குலசேகரம் | Rly. Station | முதக்குக்காப்பு சோடி 1 |
| | | | | ஆவணி | | |
| 6971 | 3 | 30 | ,, | சின்னையா ஆறுமுகம் | வண்ணார்பண்ணை | சங்கிலி 1 வடி சொண்டைப்பு 1 |
| 7060 | 10 | 50 | ,, | பெருமாள் ஐயம்பிள்ளை | சரவணை | மு. அட்டியல் பதக்கமுடன் 1 |
| 7126 | 15 | 20 | ,, | நல்லதம்பி பொன்னுத்துரை | மானிப்பாய் | மோதிரம் 1 வடி குண்டுவைத்த ½ பவுண் 2 |
| 7140 | 16 | 80 | ,, | வயித்தியருதர் அம்பலவாணர் | அளவெட்டி | மு அட்டியல் பதக்கமுடன் 1. 2 கல்லிலை. |
| 7194 | 20 | 25 | ,, | க. முத்துத்தம்பி | சொட்டடி | மோதிரம் 3 பூமுதுடி பஞ்சாயுதம் 1 |
| | | | | ஐப்பசி | | |
| 8122 | 20 | 20 | ,, | பி. முகம்மது அபூபக்கர் | சோனகதெரு | மோதிரம் 1 |
| 8228 | 26 | 18 | ,, | A. S. சிவசுப்ரமணியம் | Chapel Street | மோதிரம் 1 |
| | | | | மார்கழி மீ | | |
| 8746 | 1 | 33 | ,, | சின்னப்பு காசிப்பிள்ளை | தெல்லிப்பழை | குண்டுச்சங்கிலி அச்சரக்கூடுடன் 1. கொழுக்கியில்லை |
| 8758 | ,, | 12 | ,, | P. S. பெர்னாண்டோ | பெரியகடை | மோதிரம் 1 |
| 8902 | 9 | 15 | ,, | அந்தோனி பொரலாஸ் | தெல்லிப்பழை | கடுக்கோர் 1 |
| 9227 | 31 | 80 | ,, | கதிர்காமர் செல்லத்துரை | சண்ணாகம் | அச்சக்காப்பு சோடி 1 |
| 9228 | ,, | 90 | ,, | ஆறுமுகம் சங்கரப்பிள்ளை | சண்ணாகம் | பொன்கெட்டிப் பூராணட்டியல் பதக்கமுடன் 1 |
| | | | | 1935 ம் ஆ. தை மீ | | |
| 9287 | 3 | 13 | ,, | செல்லத்தம்பி இராசதுரை | கண்டிக்குளி | மோதிரம் 1 |
| 9453 | 11 | 65 | ,, | வயித்திலிங்கம் தம்பையா | பெரியகடை | பீலிக்காப்பு சோடி 1. 1 காரைப்பு |
| 9454 | 11 | 80 | ,, | வயித்திலிங்கம் தம்பையா | பெரியகடை | பொன் மு அட்டியல் டிம்பியுடன் 1 |
| 9489 | 13 | 80 | ,, | அம்பலவாணர் வேலுப்பிள்ளை | அராலி | தெற்கு செட்டிக்கொலின் சோடி 1. 1 முதிலை. 1 கல்லில்லை |
| | | | | மாசி மீ | | |
| 9857 | 3 | 135 | ,, | A. K. முத்துக்குமாரு | புத்தூர் | செபூ அட்டியல் பதக்கமுடன் 1 |
| 9917 | 6 | 135 | ,, | குமாரசாமி சண்முகநாதன் | நல்லூர் வடக்கு | குண்டுச்சங்கிலி அச்சரக்கூடுடன் 1 |
| D 237 | 23 | 105 | ,, | ஆறுமுகம் சங்கரப்பிள்ளை | சண்ணாகம் | சிறபிள்ளைக்காப்பு சோடி 1 வடி குண்டுச்சங்கிலி பவுண் உட்பட 1 |
| 279 | 25 | 35 | ,, | குமாரசாமி சண்முகநாதன் | நல்லூர் வடக்கு | மினது காப்பு சோடி 1 |
| 310 | 27 | 18 | ,, | வேலுப்பிள்ளை செல்லையா | கண்டிக்குளி | கடுக்கோர் 1 |
| | | | | பங்குனி மீ | | |
| 545 | 12 | 80 | ,, | வயித்திலிங்கம் தம்பையா | பெரியகடை | குண்டுச்சங்கிலி 1 |

விற்பனவு நாள் ஆடி மீ 13ம் திகதிக்குச்சரியான 28-7-36 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி தொடக்கம் எடுபட்டவைகள் பிறகேலாக மீதி மேற்படியாரிடத்திலிருந்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. ஐயம்பிள்ளை உடையார்
லெர்சின் மேன்தர்

(Mis 77. 13 & 16-7-36)

# N.வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு,யாழ்ப்பாணம்

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமானசாமான்கள்
ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலியவிடங்களில்செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சீமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.
கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
38, 3rd Cross Street, Colombo.

Telephone No 30.

(Y. 47. 8-2-36—7-2-37) வி



## திருநெல்வேலி ஒற்றுமை நிதி,

(வரைவுளது)

அதிகாரம் பெற்ற முலதனம் ரூபா 500,000.
ஒன்று 25சதமாக 80 மாதங்கள் செலுத்திரூபா
25ம்ஆதாயம்பெறலாம்
தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன.
வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.
தேசிய கருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெற முடியும். ஆகலால்
முதலை வளர்த்து வேலை யளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!
இலகுவான முறையில் இறக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிபந்தமாயும்,சம் பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்ளோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!!
கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருளும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(Y. 189. 1-11-35 to 31-10-36.) வி.



# ஆரோக்கிய லேகியம்

சிறந்த மலசுத்தி ஔஷதம்

மலபந்தமே உங்களின் ஆரோக்கியத்துக்கு இடையூறாகும். ஆரோக்கிய லேகியம் சாப்பிடுவதால் தினசரி கிரமமாய் மலமிறங்கும்; சோம்பல் நீங்கும்; தினசரி அலுவல்களுக்கு உற்சாகம் உண்டாகும்.

இன்னும் நித்திரை ஸ்கலிதம், நீருடன் ஸ்கலிதமாதல், உடம்பு இளைத்து வருதல், கை கால் அசதி, குடைச்சல், நீங்கும். பத்தியமில்லை.

20 ரூபா எடை டின் விலை ரூ. 2-00 தபால்செலவு சதம் 75.

### நீரழிவுக்கு.

அப்ரேக் சென்தூரம் கைகண்ட மருந்து.

பரீக்ஷை:—ஒரு மண் கலசத்தில் ஊசி அளவுமுப்படியான சிறிய துவாரஞ்செய்து அதில் ஜலம் விட்டு ஒழுகும்போது நமது அப்ரேக் சென்தூரம் ஒரு சிட்டிகைத்தப் போட்டால் ஒழுகும் ஜலம் உடனே அடைபட்டுவிடும். அதேபோல் நீரழிவில் அளவுமீறி ஒடும் நீரைக் குறைத்து நீரில் சர்க்கரை இருப்பது, தாகம் வரட்சி இவைகளைக் குணமாக்கும்.

20 நாள் மருந்து விலை ரூபா 12-50 சதம்.
ஸ்பெஷல் அநுபானம் சதாவாரி லேகியம் ரூபா 4-50.

### தங்கபஸ்பம்.

தாதுபுஷ்டிக்கு ஓர் வரப்பிரசாதம்.

மெலிந்த தேகத்தைப் போஷித்து சரீரத்தில் புதியரத்தத்தை ஊறச்செய்து அளவற்ற பலம், ஆண்மை வீரிய விர்த்தி உண்டாக்கும். பத்தியமில்லை. (விபரமான கேட்லாக் இனாம்.)

30 வேளை தங்கபஸ்பம் ரூபா 10. அநுபானம் லேகியம் ரூபா 2-50.
வெளிநாட்டு நண்பர்கள் ஆர்டருடன் முன்பணமனுப்ப வேண்டும்.

தண்டபாணி வைத்தியசாலை, பழனி.

Q 19. 27-4 to 26 7-36 வி (Palni S. I.)



தலைவலியுற்றபோது

# லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்

## தைலத்தை

நெற்றியிலும் கன்னத்திலும் தேயுங்கள்
தலைவலி யுடனே மாறிவிடும்
அதுவுமன்றி இது இந்தியாவில்
இந்தியர்களாலேயே செய்யப்படுவது
இத்தைலமே எல்லாவற்றிலும் சிறந்தது

Y 44 1-1—31-12-36)



## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக்குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை என்விளம்பரத்தில்உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு,சாலா முஸ்லி, சப்பேமுதஸலி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டி பான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை,பித்த பாண்டு. பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயுஇன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்துதேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா 20. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா 5. தபாற்செலவு பிரத்தியேகம்,

சிங்கப்பூர்பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பீ. சட்டம் இல்லாததனால் முன் மனிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவரூான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு

Y46 1-1-36 to 31-12-36) இலோன்.



## கண்ணே பிரதானம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கில் பிறவுண்ரோட் (கரியன் குன்று) ரத்தினவாசத்தில் அமைக்கப்பெற்ற அமிர்தானந்த வைத்தியசாலையில்இப்பொழுது நேத்திரத்திற்குரிய சிகிச்சைக்கு வேண்டப்படும் ஔஷதங்கள் கருவிகளும் சேகரிக்கப் பட்டிருத்தலால் வேண்டியவர்கள் காலை 7 மணி முதல் 10 மணிவரை வசதியாக ஆலோசனை செய்து சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம் மற்றைய நோய்களுக்கு வேண்டிய சிகிச்சை முன்போல் நடைபெறும்

வைத்தியசாலை சொந்தக்காரர்
ச. இராமலிங்க வைத்தியர்

Address:—
Manager
Amirdananda Vaidyasalai
"Ratna Vasa" Brown Road
Vannarponnai
Jaffna (Ceylon)

Y. 27-5-36 to 30-4-37 (வி)



## விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி, செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பத்தி | (கலம்) | ரூபா | 10-00 |
| ½ | ,, | ,, | ,, | 5-50 |
| ¼ | ,, | ,, | ,, | 3-00 |
| 1 | அங்குலம் | | ,, | 1-00 |

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை'



# Nethrananda Thailaya

Ceylon's Premier Curative Medicine Oil.

## நேத்திரானந்த தைலம்.

இலங்கையில் மிகவும் சித்திபெற்ற
மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50.
தபாற்கூலி 45 சதம்.



இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஐந்து நிமிஷத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதைபடர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை நரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி தலைமயிரை தீனமாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடி போடத் தேவையில்லை. இளையோரும் பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகியபெரிய உத்தியோகஸ்தர்களும்,வியாபாரிகளும்,சீமான் சீமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள், வெளிவந்திருக்கும் ஏனைய போலித்தைலங்களைப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

ரனிதர் முக்கியமாகத் தெரிந்துசொல்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்

### இந்த நேத்திரானந்த தைலமே.

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்ட பெயர் உண்டு என்று வார்த்தசிரிக்கிற ஒவ்வொரு சிறபிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலை மயக்கம், கண் எரிவு, தலைவலி, இள நரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற சிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினால் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்தில் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

தலைமை ஸ்தானம்:—
வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்னாண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணதுறை.

கிளை ஸ்தானம்:—
பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்ரோட், கொழும்பு—இலங்கை
காவில் ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணதுறை.

(H 332.0|20-3-36 to 19-9-36)



# சிவன் வேம்புத் தைலம்

செம்மேகம், கருமேகப் பத்தைக்கள், குஷ்டம், குஷ்டரோகம், அரிப்பு, தடிப்பு, கிரந்தி, கரப்பான் புண்களும்; விஷ கடிகள் மேகஊறல், கக்கூஸ்பத்தைக்கள், சொறி சிரங்குகள்; கை கால் வலி, குடைச்சல் பிடிப்புவலி முதலிய குஷ்ட ரோகங்கள்; அண்டவாதம், கண்டமாலை, அரையாப்பு, பௌத்திரம், விங்கப்புற்று ரணங்களும் ஆச்சரியமாய் குணமாகின்றன. ஊறல், பதறு, ரணங்களுக்கு இதை மேலுக்கும் பூசலாம். 12நாள் புட்டி விலை ரூபா 2. 3 புட்டிவரை தபால் செலவு சதம் 75.

ரோகங்கள் கைவிடப்பட்ட கொடிய ரோகங்களெல்லாம் இதுவரை ஆயிரக்கணக்கில் குணமாகிவிட்டன.

### தாளக பஸ்பம்.

இருமல், இளைப்பு, கஷ்டசுவாசம், கபக்கட்டு, கோழை, சுரம், உடம்பு அனலாயிருத்தல், ஆகிய கோளாறுகளையும், மூக்கில் நீர்வடிதல், ரத்தம், சிராய் விழுதல், மூக்கடைப்பு, வாயில் நீருலல், இனிப்புத் தோன்றல், பசி மந்தம், ஆகிய பீனிசக் கோளாறுகளையும் கண்டிப்பாய்க் குணம்செய்கிறது.

### இருமல், இளைப்பு சுகம்.

என்னைப் பத்துவருஷமாய்த் துன்பப்படுத்திய இரத்தகாசம், கபத்துடன் இரத்தம் விழுதல், தூக்கமின்மை, நான்குவருஷ இருமல் எல்லாம் தங்கள் "தாளக பஸ்பம்" சாப்பிட்டதில் இன்றுடன் 8 நாளில் கடவுள்கிருபையால் நல்ல சுகம்.

(Sd.) அ. செ. செய்யது இப்ராஹிம், திருக்கோணமலை.

தாளக பஸ்பம், அநுபானம், தாளிசபத்திரி சூரணம் உள்பட
20 நாள் மருந்து ரூபா 12-50.

குறிப்பு:—வெளிநாட்டுநண்பர்கள் ரூபா 5 அட்வான்ஸ் அனுப்பவும், கேட்லாக்இனாம்

தண்டபாணி வைத்தியசாலை, பழனி.

Q 19. 27-4 to 26-7-36) தி (PALNI. S. I.)


படுபயன் வெஃகிப் பழிப்படுவசெய்யார்
நடுவன்மை நாணுபவர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, July 16th 1936.